# தென்றல்

ஆசிரியர்:- கண்ணதாசன்.

உள்நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணா. | வெளிநாடு மூன்றணா | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6

மலர் 2 | சென்னை | 10—9—55 | சனிக்கிழமை | இதழ் 13


# மயிலையிலே கயிலாயப் பரம்பரை!

## சாதிவகுத்தவர் யாரோ? தமக்கொரு நீதிவகுத்தவர் யாரோ?

## வேதியர் என்பவரல்லால் வேற்று இனத்தவர் ஆமோ!

நாடுகள் பலவென்று, மன்னர்களின் முடிகளை தரையில் வீழ்த்தி எதிரி நாடுகளில் வீர உலாவந்தவன், மண்ணாசைபிடித்து மாற்று நாட்டுமக்களைக் கொன்று அவர்களுக்கு உடைமையான சிம்மாசனத்தில் வீற்றிருக்கும்போது தனக்கு அந்த இடம் கிடைக்க தான் செய்த கொடுமைகளை மறைக்க எதிரி நாட்டு மக்களிடம் "நான் படையெடுத்து வந்தது உங்களுக்கு வாழ்வளிக்கவே!" என்று கூறுகிறான் என்று வைத்துக்கொள்ளுங்கள். அந்தக் கொடியவனின் சொற்கேட்டு, உற்றார் உறவினரைப் போரிலே பறிகொடுத்து நிற்கும் மக்கள், தங்கள் சுதந்திரத்தைப் பறித்தவனைப் பாராட்டவா செய்வார்கள்! 'பாவி, பாதகா' என்றுதான் கூறுவர்.

ஏழை மக்களின் உழைப்பை உறிஞ்சி உல்லாச புரியில் வாழும் மனிதன், தனது உயர்வுக்கு குருதி கொட்டியவர்களிடம்' 'நான்உங்கள் மேன்மைக்கேதான் பாடுபடுகிறேன்' என்று கூறினால், உழைப்பை, நல்வாழ்வை இழந்த உத்தமர்களான பாட்டாளிகளின் கண்கள் கோபத்தால் கொதிக்கும்.

ஊர் மக்களை வஞ்சித்தவன் இச்சகம் பேசித் திரிகிறான் என்றால் நயவஞ்சகனின் பிடியில் சிக்கியோர் கண்ணீர் சிந்துவர்; கதறியழுது காலம் நமக்கு எப்போது சாதகம் அளிக்கும் என்று ஏங்குவர்.

உலக நாடுகளின் ஏடுகளில் இது போன்ற நிகழ்ச்சிகள் அடிக்கடி நடைபெறுகின்றன. கொடுமை விளைவித்தவன் தனது கொடுமைகளை மறைத்து அது விதியின்செயல் என்று பேசுவதும், மாற்றானது சுதந்திரத்தைப் பறித்து அவனை, வாழ முடியாதவர்கள் கூட்டத்தில் சேர்த்துப் பின்னர் தன் செயலுக்கு புது விளக்கம் தருவதும் காண முடியாத காட்சியல்ல! கேட்க முடியாத சொற்களல்ல! நம்முடைய நாட்டில் எட்டுக் கோடி மக்கள் தாழ்த்தப்பட்டவர்களாக ஆக்கப்பட்டனர். ஒற்றுமையுடன் ஒரே சமுதாயமாக, சாதி பேதமற்ற சமுதாயமாக உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற பேதமில்லாத சமுதாயமாக, இந்த நாட்டு மக்கள் வாழ்ந்தனர், ஒருகாலத்தில். இன்று ஆயிரக்கணக்கான சாதிகளாகப் பிரிந்து, ஒற்றுமை யிழந்து, உயர்வை இழந்து, உரிமையைப் பறிகொடுத்து, வாழ்கிறார்கள். அப்படிப்பட்ட மக்களில் ஒரு பெரும் பகுதியினர், தீண்டப்படாதவர்களாக, தாழ்த்தப்பட்டவர்களாக, அரிசனங்கள் என்ற பெயரில் வாழ்கின்றனர். ஒரு காலத்தில் உயர்ந்தோர் எனமதிக்கப்பட்டோர், சண்டாளர்கள், புலையர்கள், பொல்லங்கூட்டத்தினர், உயர்ந்த சாதியினரைப் பார்க்கக்கூடாதவர்கள், சாலையிலே நடக்கக்கூடாதவர்கள், நாசகாலர்கள், நாலு வேதம் படிக்கக்கூடாதவர்கள் என்று ஆக்கப்பட்டனர்.

நாகரீகம் மிக்க நாட்டிலே சாதி என்ற நச்சரவை உலவ விட்டவர்கள் யார் என்று கேளுங்கள்; ஆரியர்கள் என்ற பதில்தான் கிடைக்கும், உயர்ந்த குடிமக்களை உன்மத்தர்களாக்கியது எது என்று கேளுங்கள், இந்த நாட்டின் எட்டு திக்கிலிருந்தும் பதில் கிடைக்கும் 'ஆரியம் ஆரியம்' என்று.

சாதிப் பிரிவினையை ஏற்படுத்தி, நாட்டுமக்களைச் சண்டாளர்கள் என்று அழைத்தவர்கள் யார் என்று இன்று விளக்கம் தேவையில்லை. அனைவரும் அறிவர், அறிவுலகத்தின் எல்லைக்குள் நுழைந்தவர் யாரும் ஒப்புக்கொள்வர் எப்படி இந்த சதி நடைபெற்றது என்று.

இன்று நாடு சுதந்திரம் அடைந்துவிட்டது, நாட்டைவிட்டு தீண்டாமை போய்விட்டது. என்று கூறுகின்றனர் ஆட்சியினர். 'அரிசன முன்னேற்ற இலாகா' ஆண்டுதோறும் கோடிக்கணக்கில் இக்கொடுமையைப் போக்க பணம் செலவிடுகிறதாம். சர்க்காரின் புள்ளி விவரங்கள் நமக்குச் சொல்கின்றன. இந்த நேரத்தில் ஒருவர் பேசுகிறார். நாட்டிலே ஒரு பகுதி மக்களைத் தாழ்த்தப்பட்டவர்களாக ஆக்கியோர் பார்ப்பனர்கள் அல்ல, சமுதாயத்தில் ஒரு பகுதி மக்களைப் பார்ப்பனர்கள் கீழ்நிலைக்கு கொண்டுசென்றனர் என்பதுதவறு என்கிறார் அந்தப் பெரியவர்.

யார் அந்தப் பெரியவர் என்று கேட்கத் தோன்றும் உங்களுக்கு.

சென்னை மயிலாப்பூரில் நடைபெற்ற இந்து தர்ம சங்கத்தின் 'முதல் ஆண்டு விழாவில் பேசிய முன்னாள் அகில இந்திய நீதிமன்ற நீதிபதி எஸ். வரதாச்சாரியார் அவர்கள்தான் மேற்கண்டவாறு பேசியிருக்கிறார். அவர் பேசியதாவது.

"அரிசனங்களிடையே வெறுப்பை சில சக்திகள் வளர்க்க முயற்சித்து வருகின்றன. கடந்த காலத்தில் அரிசனங்களைக் கீழ்நிலைக்குத்தள்ள மனதறிந்து முயற்சி நடைபெற்றது என்று சில பகுதிகளில் பிரச்சாரம் நடைபெறுகிறது. கடந்த காலத்தில் நடைபெற்ற எச்செயலும், சமுதாயத்தின் ஒரு பகுதியினர் மற்றொரு பகுதியினரை இழிநிலைக்கு உள்ளாக்க வேண்டும் என்ற தீய எண்ணத்தின் விளைவு அல்ல. கிராமப்புர வயல்களில், மிகவும் பழமையான எண்ணம் படைத்த பார்ப்பனர்கள், மற்ற ஜாதி இந்துக்களுடன் சுதந்திரமாகப் பழகுவதைப்போல், தங்களது, அரிசன வேலைக்காரர்களுடன் பழகுவதைப் பார்க்கமுடியும்.

பார்ப்பனர்கள் உள்ளிட்ட ஏராளமான நிலப்பிரபுக்கள், அரிசனங்கள் தங்களது மத விழாக்களைக் கொண்டாட மிகவும் நல்ல முறையில் உதவியிருக்கின்றனர். ஆகவே, தீண்டாமை என்பது, ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தினர், மற்றொரு சமுதாயத்தின் மீது வேண்டுமென்றே கொண்டிருந்த தீய எண்ணத்தின் காரணமாக ஏற்பட்டதென்று கூறுவது முழுத்தவறாகும்." இந்திய உபகண்டத்தின் சிறந்த நீதிபதிகளில் ஒருவர் என்று பெருமைப்படுத்தப்படும் எஸ். வரதாச்சாரியாரின் சொற்களில் காணப்படும் கருத்தினை மீண்டும் படிக்கக் கோருகிறோம். சுற்றி வளைத்துப் பேசியிருக்கிறார்.

"பார்ப்பன நிலப்பிரபுக்கள், அரிசனங்களுடன் வயல்களில் கொஞ்சிப் பேசிப் பழகுவதைப் பாரீர்! அரிசனங்களின் ஆடல்பாடல்களுக்கு பண உதவிசெய்யும் காட்சியைப் பாரீர். இப்படிப்பட்ட பார்ப்பனர்களா, தீண்டாமையை வளர்த்திருப்பார்கள். இருக்காது, இருக்கமுடியாது." என்று வரதாச்சாரியார் விளக்கம் தந்திருக்கிறார். சுருங்கச்சொன்னால் தீண்டாமை என்னும் கொடிய நோய் சமுதாயத்தில் தோன்ற பார்ப்பன சமுதாயத்தினர்தான் காரணம் என்று சொல்வது சுத்தப் பொய் என்று மயிலாப்பூர் இந்து தர்ம சங்கத்தில் பேசியிருக்கிறார்.

தனது கிள்ளை மொழியில், குழந்தை, தோட்டத்தில் பாடிஆடிக் கொண்டிருந்தது. சோலையில் பூத்துக் குலுங்கும் மலர்களுக்கிடையே அழகு நடை போட்டு அன்பின் உருவாய்ச் சென்ற குழந்தை ஒன்றை எங்கிருந்தோ வந்த கருநாகம் ஒன்று தீண்டிவிட்டது. குழந்தையின் பொன்னிறமேனி, கருநிறமாகிக் காட்சியளிக்கிறது. கைகால்களில் அசை

(8-ம் பக்கம்)

# மகளுக்கும் இளையவள் தாய்!

## வரலாற்று வாய்மைசொலும் வளமான இலக்கியம்

## வடித்தெடுத்த நெறிமுறையைத் தொகுத்துவைத்த ஓவியம்

பன்மொழிப் புலவர்
**கா. அப்பாதுரையார்,**
எம். ஏ., எல். டி.,

(சென்ற இதழ் தொடர்ச்சி)

சங்க இலக்கியம் மட்டுமன்றிப் பிற்கால இலக்கியத்தைக் கூட வடமொழியாளர் பின்பற்றத் தயங்கவில்லை. 9.ம் நூற்றுண்டுக்குப் பிற்பட்ட வடமொழிப் புலவர் தமிழின் எதுகை மோனைகளை வடமொழியில் மேற் கொண்டனர். இதேகாலத்தில்தான் பழைய பொருளிலக்கணத்தின் பகுதியான செய்யுளணிப் பகுதிகளும் அகப்பொருளிலக்கணங்களும் தமிழில் தனிப்பட்ட முழு இலக்கணங்களாக விரிக்கப்பட்டன. இவற்றையும் பக்திப் பாடல்களாகிய தாண்டகங்களையும் பாசுரங்களையும் சந்தப் பாடல்களையும் வடமொழியாளர் பின்பற்றினர். கால முன் பின் தொடர்பு கவனியாது தமிழர் இவற்றை வடமொழியிலிருந்து மேற்கொண்டதாக இதுகாறும் புலவர் கருதி வருகின்றனர். இது தவறு. வடமொழியிலும் தாய்மொழிகளிலும் ஏற்பட்ட இலக்கிய அலைகளும் இயக்கங்களும் பெரும்பாலும் தமிழிலிருந்து தோன்றினும் உடனடியாக இந்தியா முழுவதும் விரைந்து பரந்ததே இம்மயக்க உணர்வுக்குக் காரணம். சமயத்துறையில் பக்தியியக்கம், மொழித் துறையில் மணிபவள நடை (தாய்மொழி வடமொழிக் கலப்பு) ஆகியவை இத்தகைய அனைத்திந்திய இயக்கங்களுட்சில.

தமிழிலக்கியமும் வடமொழி இலக்கியமும் சங்க இலக்கியத்தைப் பேரளவு பின்பற்றினவாயினும் சங்க இலக்கியத்தின் பல சிறப்புக்களை அவை பின்பற்றவோ மேற்கொள்ளவோ முடியவில்லை. இது காலதேச மாறுபாடுகளின், பயன் என்பதில் ஐயமில்லை. வடமொழி இலக்கியத்தின் புகழ் இந்தியாவெங்கும் பரவியிருந்த காலமாகிய தாய் மொழி இலக்கிய காலத்தில் கூட வடமொழி யிலக்கியத்தின் தலை சிறந்த துறையாகிய நாடகம் எம்மொழியிலும் பின்பற்றப்படவில்லை. இதன்காரணம் வடமொழி இலக்கிய கால நாகரிகம் அதன் பின் மேலும் கெட்டதேயாகும். இதுபோலவே தமிழகத்தில் சங்க காலத்தில் வழங்கிய ஐந்திணை மரபும் அகப்புறப் பொருள் துறைமரபுகளும் தமிழ் நாட்டிலே நாகரிகச் சீர்கேட்டினுல் நன்கு உணரப்படாமல் வரவர நலிவுற்றன. வடமொழியாளரும் அணியிலக்கணத்தையும் பக்தி யிலக்கியத்தையும் மேற் கொண்டது போல் அவற்றை மேற் கொள்ளவில்லை.

ஐந்திணை மரபின் நுணுக்க விவரங்களை அதற்குரிய துறைச் சொற்களுடன் புலவர் விளக்குவதுண்டு. ஆனுல் மாணவரும் பொது மக்களும் அச்சொற் காட்டிடையே எத்தகைய சிறப்பையும் காணமாட்டாமல் இது. தமிழ்ப் புலவர்களின் திறமையைக் காட்டும் ஒரு பொறியெனக் கருதியிருக்கின்றனர். இதில் வியப்பில்லை. இன்றைய மேனுட்டு விஞ்ஞான அறிவு வளர்ச்சி பெருது போகுமானுல் விஞ்ஞான நூல்களைப் பயின்ற ஒருவன் அவற்றிற் கண்ட செய்திகளை ஒப்பிக்கத் தொடங்கினுல் விஞ்ஞான மாணவரல்லாத பிறர் இது போன்றே மயக்கங்கொள்வர். கிரேக்க இலக்கியத்தின் அறிவு மக்களிடையே மறைந்து போன பிறகு ஐரோப்பாவில் இடையிருட் காலமாகிய கி. பி. 500-முதல் 1600-வரை ஆயிர ஆண்டுகளாக அது பெயரளவில் மதிக்கப்பட்டே வந்தாலும் அதன் சிறப்புக்கள் உணரப்படாமலிருந்தது என்பது காரணம். இவற்றைப் போலவேதான் சங்க இலக்கியச் சிறப்பும் ஐந்திணை மரபுச் சிறப்பும் பெயரளவில் புலவரால் மதிக்கப்படுகிறதாயினும் இன்றளவும் தமிழ்ப் புலவராலோ பிற நாட்டாராய்ச்சியாளராலோ அவற்றின் இயல்புகள் உணரப்படவில்லை என்று கூறுவது மிகையாகாது.

ஐந்திணை மரபின் அடிப்படையாவது: கலைஞன் இயற்கையையும் வாழ்வையும் ஆய்ந்துணர்ந்து அவற்றுக்குப் பிழைபடாமல் கலை தீட்டவேண்டும் என்பதாம். ஒருவன் கலைஞன் என்ற காரணத்துக்காகக் காலையில் பூக்கும் மலரை மாலையில் பூப்பதாக, இரவில் பூக்கும் மலரை பகலில் பூப்பதாகக் கூறலாமா? உழவன் வாழ்வைச் சித்தரிக்கும் போது பொன்னும் மணியும் உவமையிலும் வர்ணனையிலும் கலந்து மன்னன் வாழ்வில் கந்தைகூளங்களை உவமை கூறலாமா? கூறின் அதை அருவருப்பு (ரசாபாசம்) என்று கொள்வத்தானே செய்வோம்! கலை காட்டுப்பூ அல்ல; பண்பட்ட அறிவிற் பூத்த தோட்ட மலரே யாகும். தோட்டக்காரன் தோட்டத்தொழில் திறத்துக்கும் அறிவுக்கும் ஏற்ப, அவன் இடும் நல் உரத்துக் கேற்ப மலர்கள் மணமும் அழகும் புதுமையும் பெறும். அதுபோலவே இலக்கியங்களினிடையே சங்க இலக்கியக் கவிதை மலர் பண்பட்ட சங்கப் புலவர் அறிவுக்கு இலக்காய்த் திகழ்கின்றது.

'கிரேக்க இலக்கியத்தின் தனிச் சிறப்புக்களுள் ஒன்றுகிய முல்லைப் பாடல் முல்லை நில வாழ்க்கையின் முதற் பொருள் (இயற்கைச் சூழ்நிலை) கருப்பொருள் (இயற்கை வளம்) உரிப் பொருள் (வாழ்க்கை நிலை) ஆகியவை வழுவாது கூறும் புது இயல்புடையது. மேனுட்டிலக்கிய முழுதும் இது உயர்வாகப் பேணப்பட்டும் பின்பற்றப்பட்டுமுள்ளது. இதன் தூய கலையுணர்வு கிரேக்க நாகரிகத்தின் தனிப் பெருஞ்சிறப்பைக் குறிப்பதாகவே கொள்ளப்படுகிறது—வெறும் புலமைப் பொறியாகக் கொள்ளப்படுவதில்லை. கிரேக்கரிடையே முல்லை நிலக் கவிஞர்கள் காட்டிய இதே உயர்நெறியைத் தமிழர் எல்லா நிலங்களின் வாழ்விலும் காட்டினர். முல்லை நிலக்கவிஞன் முல்லை நில உவமைகளையும் வாழ்க்கைப் பண்புகளையும் குறித்தது போலவே, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை நிலக் கவிஞர்களும் அவ்வந் நிலங்களின் வாழ்க்கையைச் சித்தரித்தனர். இத் திணைமரபாகிய இயற்கைப் படப் பிடிப்புக்குத் தனித் தமிழ்ச் சங்க இலக்கியமே உலகின் தலையாய முன்மாதிரி யாகும். கிரேக்க முல்லைத்திணை யிலக்கியத்தை 1000 ஆண்டுகட்குப் பின் கண்டு அதனுல் மறு மலர்ச்சியுற்ற மேலையுலகு, தமிழரின்முழுத்திணை இலக்கியத்தின் உயர்வு காணில் இன்னும் பாரிய மறு மலர்ச்சிப்புரட்சிக்கு ஆளாகும் என்று நான் எண்ணுகிறேன்.

திணை மரபுச் சிறப்பு வருங்கால இலக்கியச் சுவைஞர்கள் கண்டு கூற வேண்டிய ஒன்று. ஆனுல் இன்றே காணக் கூடிய இருபண்புகள் வரலாற்று வாய்மையும் விஞ்ஞான வாய்மையும் ஆகும். இரண்டாயிரம் ஆண்டுகட்டு முன் தமிழகம் இருந்த நிலைமையை அது படம் பிடித்துக் காட்டுகிறது. அத்துடனுக, இரண்டாயிர ஆண்டுகட்கு முற்பட்ட இந்தியாவின் படத்தைத் தேடுபவர்க்கு அதுவே வரலாற்றுக்குரிய இலக்கியமா யிருக்கிறது. ஏனெனில் வடமொழி இலக்கியத்தைப் போலவும் பிறமொழி இலக்கியங்களைப் போலவும், பிற்காலத்துத் தமிழிலக்கியத்தைப் போலவும் அது ஏதோ ஒரு நாட்டில் ஏதோ ஒரு மனிதனைப்பற்றி ஏதோ ஒரு புலவர் தம் கற்பனைத் திறனுல் கண்ட காட்சியைக் கூறவில்லை. இதே தமிழ் நாட்டில் இதே இந்திய உபகண்டப் பகுதியில் ஆண்ட அரசர், சிற்றரசர், புரவலர், மக்கள், மக்கள் வாழ்க்கை ஆகியவைபற்றி, இதே தமிழ் நாட்டுப் புலவர் சிலர் கண்டதும் கேட்டதும் எண்ணியதுமே இவ்விலக்கியத்தில் குறிக்கப்படுகின்றன. நம்பிக்கையூட்டத் தக்க வரலாற்று வாய்மையுடைய இவ்விலக்கியம் இதிகாசம் புராணங்கள் அல்லது கற்பனைக் காவியங்கள் போலன்றித் தேசவரலாற்றுக்குப் பேருதவி புரியவல்லது. அது மட்டுமோ! பிறநாடுகளின் இலக்கியங்கள் பெரிதும் அரசனையும் பெருமக்களையும் சார்ந்தன. தமிழ்ச் சங்க இலக்கியமோ அரசனையும் பெருமக்களையும் மட்டுமன்றிப் பல திணை நிலமக்கள், பல வகுப்பினர் வாழ்க்கைகளையும் கருத்துக்களையும் சித்தரிப்பது. தற்கால இந்திய வாழ்க்கை வரலாற்றுக்கும் மோகெஞ்சதரோ வாழ்க்கைக்கும் இடையேயுள்ள தேசிய இலக்கியப் பாலம் இச்சங்க இலக்கியமொன்றே. இந்திய மக்கள் வாழ்க்கை, மொழி வளர்ச்சி ஆகியவற்றினை ஆராய்பவர்க்கு இது இன்றியமையா இலக்கியம் மட்டுமன்று, ஒரே இலக்கியமாக மிளிர்வதாகும்.

வரலாற்றைப் போலவே தற்கால விஞ்ஞான அறிவுக்குக் கூடச் சங்க இலக்கியம் மிகவும் பயன்படுவதென்பதை இன்றைய புலவருலகும் மாணவருலகும் கவனியாதிருக்கின்றது. நாட்டின் அக்கால வாழ்க்கை நிலையை அறிய விரும்புபவனுக்கு மட்டுமன்றி அக்காலத்தவர் அறிந்திருந்த நாட்டுச் செடி கொடிகள், விலங்குகள், பறவைகள், பொருள்கள், ஆகியவற்றையும் அவற்றின் பண்புகளையும் சங்க இலக்கிய மூலம் அறியலாம். இயற்கையிலில்லாத உயிர்கள் செடிவகைகளையும், பொருந்தாப் பழங்கதைப் பண்புகளையும் நாம் சங்க இலக்கியத்தில் பெரும்பாலும் காண்பதில்லை. யாரும் காணுத பாலும் நீரும் பிரிக்கும் அன்னம், யானைகளை அச்சுறுத்திக் கொல்லும் சிங்கம், வெயிலும் காற்றும் உண்ணும் உயிரினங்கள், யானை முகமுடைய சிங்கங்கள், சிங்க முக மனிதர்கள், சிறகுடைய சிங்கங்கள் ஆகியவற்றை இங்கே காண மாட்டோம். அத்துடன் காணும் செடிகளிலும் சங்கப் புலவர் பாடுங் கிளி, பச்சையிலை எனப் பொதுப் பண்புகள் கூறி இடம் அடைப்பதில்லை. அவ்வவ் வுயிர்கள் பொருள்களின் தனிச் சிறப்புப் பண்புகளையே குறித்தனர். பாலை நிலச் செடிகளின் இலையற்ற பால்செறிந்த தன்மை, நீர்வாழ் கொடிகளின் இலைகளின் அடிப்புறக் கருமை, இலைகளின் வடிவங்கள், காயாமரம், பூவாச்செடி, பறவைகளின் சிறப்புப் பண்புகள் ஆகியவற்றையே அடைமொழியாகக் கூறிச் சங்கப் புலவர் அழகுக்கலையிலும் அறிவுத் திறத்தையும் பயனையும் தருவர். அவர்கள் கவிதை அறிவியல் தரும் குன்றுத காலத்தில் அறிவியலின் பயனுய் விளைந்தது. இங்கிலாந்தில் டெனிஸன் கவிதையில் காணும் அறிவியல வாய்மையையும் ப்ரௌனிங் கவிதையில் காணும் வரலாற்று நோக்கையும் மெய்விளக்க (Philosophy) வாய்மையும் ஸ்காந்திநேவி, யரஷிய இலக்கியங்களில் காணும் வாழ்க்கை வாய்மையையும் ஃபிரஞ்சு, கிரேக்க இலக்கியங்களின் கட்டமைப்புக் கலையாண்மையையும் சங்க இலக்கியத்தில் ஒருங்கே காணலாம்.

**முற்றும்.**

# எண்ணம்

## சிலப்பதிகாரம் பாண்டியன் தீட்டியதாம் !

'செந்தமிழே உயிரே, நறுந்தேனே ! செயலினை மூச்சினை உனக்களித் தேனே! நைந்தாயெனில் நைந்துபோகும் என் வாழ்வு ! நன்னிலை உனக்கெனில் எனக்குந் தானே !" இந்தப் புதுவைக்குரல், புரட்சிக்குரல் நல்லவர் உள்ளமெல்லாம், நம் தமிழ் இல்லமெல்லாம், விழித் தெழுந்து மொழிப்போர்க்களம் நோக்கி பீடுநடை போட்டுப் போகும் பெரும்படையின் எழுச்சிப்பண்ணாகி தமிழகத்தில் ஒலிக்கத் தொடங்கி விட்டது. நல்லிளைஞர்கள், நாட்டின் ஈட்டி முனைகள், மொழியழிக்க முனைந்தோரை குறி வைக்கத் தலைப்பட்டுவிட்டார்கள்- புதரிலா, புற்றிலா, சங்கத்தமிழ் அழிக்கக் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கும் அந்த இனமொழி வைரிகள் எங்கே ? வாளெடுப்போம், போர்தொடுப் போம், வையகத்தின் கீர்த்தி பெறுவோம்-என முழக்கமிட்டு வடதிசை நோக்கி எக்காளமிடத் தொடங்கிவிட்டது தென்புலத்தின் மறவர்-படை. ஆனாலும், தாள்பணிந்து வாழ்வு கண்ட வடபுலத்தார்,-தரணிதனைக் கட்டிக் காக்கும் உரிமைகளை பெற்றிட்ட காங்கிரசார் நம் உள்ளம் உணராது ஊசிகொண்டு கிறிப் பார்க்கின்றனர்.

ஐ. நா. கல்விக்குழு கம்பராமாயணத்தை ஆங்கிலத்திலும், சிலப்பதிகாரத்தை பிரஞ்சு மொழியிலும் மொழிபெயர்க்க முற்படுவதாக பத்திரிகைகளிலே செய்தி பார்த்தோம். சொந்த மொழி இலக்கியம் பிறமொழியிலே மிளிரப்போவது கண்டு மகிழ்கிறோம்; பெருமைப்படுகிறோம். ஆனாலும், மூப்படைந்த இலக்கியம், குறைந்தளவு பேசுவோரின் மொழியிலும், வயதிலே குறைந்த இலக்கியம் உலகமெலாம் பேசுகின்ற மொழியிலும் மொழிபெயர்க்கப்படப் போகின்றதே என்பதை நம்மால் சொல்லாமல் இருக்கமுடியவில்லை. கம்பராமாயணத்தை இழித்தும், பழித்தும் பேசியே பழக்கப்பட்டவர்கள்; ஆகவேதான் இவ்வாறு சொல்லுகிறார்கள் என்று யாராவது கருதினால், அவர்கள் மொழி வரலாறு, அறியாதவர்களாகத் தானிருப்பார்கள். கம்பராமாயணத்தைக் காட்டிலும், சிலப்பதிகாரம் மேம்பாடுடையது என்று நாம் மட்டும் சொல்லவில்லை. நம் இயக்கத்திலே தொடர்பில்லாத, சைவத்திலே மிகுந்த பற்றுக்கொண்ட தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் ராசமாணிக்கனார் அவர்களே வெளிப்படையாக அறிக்கை விட்டிருக்கிறார்கள், "கம்பராமாயணம் கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் செய்யப்பட்டது...... அது அக்கால தமிழ்மக்களின் பண்பாட்டையோ நாகரீகத்தையோ உள்ளவாறு காட்டுவதாகாது" என்று. தமிழ்நாட்டின் நிலையை, அதன் கலையை, பண்பாட்டை உணர்த்தாத நூலை பிறமொழியில் இயற்றுவதைவிட, தமிழ்நாட்டின் பழக்க வழக்கங்களையும், உயர்ந்த நாகரீகத்தையும், பண்பாட்டையும் முடியுடை வேந்தர் மூவரின் ஆட்சித் திறனையும் அவர்தம் வீரத்தையும் எடுத்துக்காட்டும் பழம்பெரும் இலக்கியங்களான புறநானூறு, அகநானூறு. எட்டுத் தொகைபோன்ற நூல்களை மொழிபெயர்க்கலாம் என்ற யோசனையையும், ராசமாணிக்கனார் அவர்கள் அறிக்கையில் விளக்கிக் காட்டியிருக்கிறார்கள். 'கத்தியெடு, களம் புகுவோம்' என்று வீரப்பாடம் போதிக்கும் போர்க்காதையிருக்க, வாளால் சாதிக்க முடியாதவற்றையெல்லாம் வஞ்சகத்தால் சாதிக்க முனைந்த ராமகாதையை மொழிபெயர்த்து இதுதான் தமிழிலக்கியம் என்று உலகநாடுகள் சபையில் சொல்லப்போவதை, தமிழ் நாட்டின்பால், உண்மையான அக்கரை கொண்டோர் எவரும் ஒப்ப மாட்டார்கள். ஆகவே, "மொழிபெயர்க்க இருக்கும் தமிழிலக்கியங்கள், தமிழ்மக்களை வீரவாரிசு வழிவந்தோராக உலகத்தாரை நினைக்கத் தூண்டும் புறநானூறு போன்ற புரட்சி இலக்கியங்களாக இருக்கட்டும்" என்று நாமும் துணைநின்று குரல் கொடுக்கிறோம். அதோடு சர்க்காருக்கு ஒரு வேண்டுகோள்; ஒரு நாட்டின் நல்லிலக்கியத்தை மொழிபெயர்த்து வேறு நாட்டுக்கு அனுப்புகையில், சர்க்கார் அது பற்றிய முன்னேற்பாட்டில் மிகுந்த கவலையெடுத்துக்கொள்ளவேண்டும். சர்க்காருக்கில்லாத அக்கறையா? என்பீர்கள். இந்த நாட்டு சர்க்கார் இலக்கியத்திலே எத்துணை தேர்வு (?) கொண்டது என்பதற்கு சான்றையும் தருகிறோம்; இந்திய அரசாங்க நூலாசிரியர்கள், 'சிலப்பதிகாரம் ஒரு பாண்டிய அரசனால் எழுதப்பட்டது' என்று எழுதியிருக்கிறார்கள் என்றால், இதைக் காட்டிலும் வேதனை தரும் செய்தியொன்று தமிழர்களுக்கு வேறெங்கிருந்து கிடைக்கப்போகிறது ! இந்திய அரசாங்கச் செய்தி வானொலி இலாகாவின் வெளியீட்டுப் பிரிவு இயற்றிய 'தென்னிந்தியாவுக்கு வழிகாட்டி' என்ற ஆங்கில நூலில் அவ்வாறு எழுதப்பட்டிருக்கிறது. சிலப்பதிகாரம், பாண்டியன் தீட்டியதாம்-சிங்காதனத்தில் வீற்றிருப்போரால் நியமித்த நூலாசிரியர்கள் சொல்லுகிறார்கள். இப்பேர்ப்பட்ட 'அறிவாளி'களைப் போன்றோரிடம் தமிழிலக்கியம் மொழிபெயர்க்க விட்டுவிடப்பட்டு விடக்கூடாது என்பதற்குத்தான் துவக்கத்திலே, இன்று தமிழர்படை அடைந்திருக்கும் கொதிப்பை எடுத்துக்கூற நேர்ந்தது. 'கூடாது' என்பதற்கு, 'கட்டாயமில்லை' என்று பொருந்தாத பதிலைச் சொல்லி இந்தி மொழியைப் புகுத்திட நினைக்கும் வடவரின் தர்பார் தமிழிலக்கியத்தைப் பற்றிய தகராறுகளிலும் ஆழம் தெரியாமல் காலை விட்டால், விளைவு விபரீதமாகிவிடக்கூடும். மொழிபெயர்க்கப் படாமலே புறநானூற்றுக் காட்சிகள் ஐ. நா, சபையிலே விளக்கத்துக் குரியதாகிவிடலாம். சர்க்காருக்கு இது முன்னறிவிப்பு.

# கல்லக்குடி மாகாவியம்

— கண்ணதாசன் —

(8)

### தானைபோம் படலம்—போர்புரி படலம்

*இரண்டாம் பகுதி :*

சிறையினை நோக்கி வீரன்
சென்றனன் என்ற செய்தி
பறையறை வித்தாற் போன்று
பாசறை உள்ளோர் காதில்
திரையென மோதும்; அங்கே
திரும்பிய தோழர் கூட்டம்
வரையொடு இரண்டாம் தானை
வருகவென் றழைக்கும் ஓங்கி!

எப்பொழு தெங்கே சென்று
இருப்பினும் அங்கே யெல்லாம்
கப்பிய சோம்பல் நீக்கிக்
கடமையென் றழைக்கும் இராம
சுப்பையன் தலைவோ னாக
தொண்டர்கள் இருபத் தெண்மர்
1 கப்பினை நிமிர்த்திச் சென்றார் !
கவிகொளப் பொருளும் தந்தார் !

தலைவனைச் சிறைக்கோட் டத்துட்
தள்ளிய பின்னர் தானை
நிலைகுலைந் திடுமென் றெண்ணி
நின்றவர், மீண்டும் ஒன்று
அலையென வருதல் கண்டார் !
அடதமிழ் நாடா! அன்னார்
சிலையெனச் சமைந்தார் மீண்டும் !
செய்வதொன் றறியா ராகி !

வில்லிலை வாளும் இல்லை !
வீறுகொள் தானை வாயின்
சொல்லலால் கலமே தில்லை !
தொடர்வுறும் ஒழுங்கல் லாமற்
கொல்வினை இல்லை ! ஏனும்
கூரிய விழியால் வந்த
நல்லவர் படைக்கூட் டத்தை
நடுக்குடன் கண்டார் அன்னார் !

வந்தது வண்டி ! வந்து
நின்றது வணங்காச் சென்னித்
தென்தமிழ் நாடன் போல !
தீரர்கள் அணியாய்த் தங்கள்
2 கொந்தகன் முன்னே செல்லக்
குவிந்தனர் படுத்தார் ! அங்கே
வந்தவர் கண்டார் தாமும்
மகிழ்வுடன் படுத்தார் ! கேளீர் !

ஆயிரம் தலைக்கு மேலே
ஆங்குறக் கண்டார் நெஞ்சம்
தாயர்தம் நெஞ்சம் நோக்கித்
தாவிடும் ! ஆனால் அங்கு
பாய்விரித் திருந்தார் நெஞ்சு
பதறிடக் காணேம் ! மேனிச்
சாய்விலும் சிரிப்பார் அண்ணன்
தம்பியர் அல்லால் யாரே !

தொல்லையை அறிந்த தாங்கே
சூழ்ந்துள ஆள்வோர் ஏவல் !!
3 வல்லையின் நெருங்கி வீர
வடிவினன் சுப்பை யாவை
மெல்லிய குரலில் வேண்டி,
"வீரர்கள் வருக ! மற்றோர்
எல்லையின் நீங்கிச் செல்க !"
என்றிடக் கேட்டார் ; அன்னான்

"நல்லது" என்றான் ! மற்றோர்
நகர்ந்தனர் இருபத் தெண்மர்
முல்லையைத் தொடுத்தாற் போல
மூண்டனர் ! சிறைப்பட் டார்கள் !
எல்லையைக் கடந்தார் ! நீல
வாகனத் தேற்றப் பட்டார்
4 வல்லியக் கூட்டம் வாழ்த்த
வணங்கிய வாறே சென்றார் !

ஓரிடம் நில்லான் ! எந்த
உணர்விலும் நல்லான் ! அன்பு
சேரிளம் சொல்லான் ! தீய
சேர்க்கையிற் செல்லான் ! வீரப்
போரிடல் வல்லான் ! ராம
சுப்பையன் போனான் நண்பர் .
சேரிடம் - அதுதான் இங்கு
சிறையெனச் சொலுமோர் சோலை !

1. கப்பு-தோள் ; 2. கொந்தகன்-படைத்தலைவன்
3. வல்லையின்-விரைவாக ; 4. வல்லியம்-புலி,

# சிதம்பர ரகசியம்

[நகரக்காங்கிரஸ் பிரமுகர் சுப்பிரமணியம் காலை உணவை முடித்துக் கொண்டு சோபாவில் சாய்ந்தார். பையன் தினசரிப்பத்திரிகையை அவர் முன்னிலையில் வைத்தான். பஜார் செய்திகள், தங்கவிலையின் ஏற்ற, இரக்கம், இவைகளைப்படித்து விட்டு சுப்ரமணியம் அரசியல் செய்திகளைப் படிக்க ஆரம்பித்தார். ஒரு செய்தி அவர் நெஞ்சைக் குடைந்தது.]

**சுப்ர:** என்ன! தென்னிந்திய ராஜயங்கள் ஒன்று சேரவேண்டுமா? நல்லாருக்கு, நாடு உருப்பட்டாப்பிலேதன்! பெரியவுங்களே இப்புடிப்பேசினா என்னாவது? ஊரிலே இருக்கிறவன், பேசிறதை நாம் எப்படிக்கட்டுப்படுத்திறது! சேச்சே! மேயர் இப்படிப் பேசியிருக்கவே கூடாது. அதுவும் மந்திரிகளை வச்சிக்கிட்டா இப்படிப் பேசறது! இனி அந்தப் பசங்க விடமாட்டாங்களே!

**சித்திரவேலு:** (உள்ளே நுழைந்து) நமஸ்காரம்!

**சுப்ர:** ஓ! சித்திரவேலுவா! வாப்பா! நல்ல நேரத்திலே வந்தே! இன்னிக்கு பத்திரிக்கே பார்த்தியா?

**சித்:** மேயர் பேசினதைத்தானே சொல்றீங்க?

**சுப்ர:** ஆமா, ஆமா, அதுதாம்ப்பா! ரெண்டு பேருக்கும் ஒரே மாதிரி உதிச்சிருக்கே!

**சுப்ர:** காங்கிரசினா சும்மாவாதம்பி! நம்மவுங்களுக்கெல்லாம் ஒரே மாதிரித்தானே தோணும்! என் தம்பி, மேயரு இப்படிப்பேசலாமா? நம்ப நேரு என்ன நெனைச்சுக்குவாரோ?

**சித்:** ஆமாங்கண்ணே! (பெருமூச்சு)

**சுப்ர:** நடக்கட்டும். நடக்கட்டும்! (விசனத்தோடு)

**சித்:** வரட்டுமா?

**சுப்ர:** நல்லது!

★

[மேயர் சிதம்பரர் ரேடியோவை முடுக்கிக் கொண்டிருக்கிறார். சுப்ரமணியர் உள்ளே நுழைகிறார்.]

**சுப்ர:** நமஸ்காரம்! நமஸ்காரம்!!

**மே:** ஓஹோ! வாங்க! வாங்க! என்ன சௌக்கியந்தானே! நகரசபைத் தேர்தலெல்லாம் எப்படியிருக்கு? எதிர்க்கட்சிப் பிரச்சாரம் வலுத்திருக்காமெ! நெசந்தானா?

**சுப்ர:** யாரு காங்கிரசுக்கு எதிரா பேசிறாங்களோ, அவங்களுக்கு ஆதரவா நீங்களே பேசியிருக்கீங்களே!

**மே:** நானா? எங்கே பேசினேன்!

**சுப்ர:** அது தான் தென்னிந்திய ராஜ்யங்களெல்லாம் ஒன்னா சேரணும்னுபோனவாரம் பேசல்லியா?

**மே:** அடடே, அதுவா! அது அவங்களுக்கு ஒன்னும் சாதகமானதில்லையே!

**சுப்ர:** சாதகமில்லையா? என்னங்க அப்படிச் சொல்றீங்க! அவங்களும் நாட்டைப் பிரிக்கனும்னுதான் சொல்றாங்க; நீங்களும் அப்படித்தான் சொல்லியிருக்கிறீங்க, ஒன்னும் வித்தியாச மில்லையேங்க!

**மே:** அது தான் தப்பு! நான் சொன்னது தென்னிந்திய ராஜ்யங்கள் ஒன்று சேரனும்னுதானே! ஆனால் அவங்க அப்படிச் சொல்லல்லே, தென்னாடு பிரிந்து, வட நாட்டோடு தொடர்பையே அறுத்துக்கிற வேணும்னல்லவா அவங்க சொல்றாங்க; நான், தென்னாட்டு வரிப்பணம் வடநாட்டுக்குப் போகப்படாதுன்னு நான் சொல்லல்லியே; நான் அப்படிச் சொல்வேனா? எனக்குத் தெரியாதா நேருவைப் பத்தி; தென்னிந்திய ராஜ்யங்கள் ஒன்னு சேர்ந்தா, பெரிசா இருக்கலாம்னுதான் சொன்னேன்; என்னுடைய யோசனை, இன்னும் சொல்லப்போனா, தென்னாடு பிரியணும்னு சொல்றவங்களுக்கு தீயதாச்சே!

**சுப்ர:** அப்படியா! அப்படியா! நான் தப்பா புரிஞ்சுக்கிட்டேனுங்க; மன்னிச்சுக்கங்க! வரட்டுமா?

—காஞ்சிகள் கற்பனையே

# கலவியிற் பெரியவன் கம்பன்

'கல்வியிற் பெரியவன் கம்பன்' என்பது பழமொழி. மேலே கண்ட தலைப்பு அவன் காவியம் நமக்குத் தந்த புது மொழி! கலவியிலும் பயங்கர உருவகம் படைக்க அவனால் தான் முடியும்!

ஆண்களும் பெண்களும் மதுவுண்டு மயங்கிக் கிடக்கிறார்கள்; பெண்டிரும் மதுவுண்டனர்!-பேரானந்தக் காட்சி! இருபாலரும் மதுவுண்டபின்னர் என்ன நடக்கும்? இயற்கையாகவே காமத்தின் உச்சநிலைக்குப் போகும் மதுகை மாந்தர்கள், மதுவுண்டபின் என்ன ஆவார்கள்? அட அவர்கள் போகிறார்களோ, இல்லையோ, எந்த நிலையில் கம்பன் அவர்களைக் கொண்டுவந்து நிறுத்துவான்? உங்களுக்குத் தெரியும், ஆனாலும் ஒரு பாடல் கேளீர்! 'தனங்களினிளைய' மாதர்கள் வரிசையாக நிற்கிறார்கள். 'நளிர் நறுங்குஞ்சி மைந்தர்'கள் எதிரே வரிசையாக நிற்கிறார்கள். தனித்தனியாக ஜோடிகளைப் பிரித்துவிட்டு, வேடிக்கை பார்க்கக் கம்பன் விரும்பவில்லை. கூட்டமாக நிறுத்திவைத்து 'கோரஸ்' பாடுகிறான்! 'எழுதரும் கொங்கையின'ரின் ஆடைகளை எல்லா ஆடவர்களும் ஒட்டுமொத்தக்கூட்டாகக் களைந்து வீசுகிறார்கள். மேல், கீழ் உள்ள சகல ஆடைகளையும் களைகிறார்கள். அவ்வளவு கூட்டத்தையும் ஒரே காட்சியில் படம் பிடிக்கிறான் கம்பன்! 'ஒன்-ட்டு-த்ரீ' சொல்லி ஒரே சமயத்தில் களைய வைக்கிறான்.

சரி, ஆடைகளைக் களைந்தாகிவிட்டது! இனி, என்ன? அது நமக்கு வேண்டாம்! ஆனால் அதற்கு மேலும் ஒரு ஆபரணத்தை அறுத்து எறிகிறார்கள் ஆடவர்கள். அதுதான் மேகலை! ஏன் அறுத்தெறிகிறார்களாம்? உணர்ச்சியோடு சொல்கிறான் கம்பன்! ரகசியச் செயல் நிகழும்போது, மேகலை சப்தமிட்டு அதை வெளியில் பரப்பிவிடுமாம்! அதற்காகக் களைந்தெறிகிறார்களாம்! பக்கத்திலேகூட வைத்துக்கொள்ளவில்லை; எறிந்தே விடுகிறார்கள்! இதுவன்றோ படப்பிடிப்பு! இதைப் படிக்கும்போது ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியின் காலத்தில் நாமும் பிறந்திருக்கக் கூடாதா என்று காளையர்கள் கலங்கக்கூடாது! அப்படிப் பிறக்காதவர்கள் படிக்கத்தானே, கம்பன் அவ்வளவு அழகாகப் படம்பிடித்திருக்கிறான்! இருவரும் மதுவுண்டு வெறியாட்டம் ஆடும் நிலையை 'கம்பன் காவியத்'திலன்றிக் கொக்கோகத்தில் கூட காணமுடியாதே! படியுங்கள், படியுங்கள்! கம்பதாசர்கள் கேட்டுக்கொள்வதுபோல, காவியத்தை ரசியுங்கள்! ரசித்த பிறகு, அதுபோன்ற காரியத்தில் ஈடுபட உணர்வு தோன்றுமானால் அதைத் தடுத்து நிறுத்துவதெப்படி என்பதையும் கம்பதாசர்களிடமே கேளுங்கள்!

அது இது.

நறைகம ழலங்கன் மாலை நளிர்நறுங் குஞ்சி மைந்தர்
துறையறி கலவிச் செவ்வித் தோகையர் தூசு வீசி
நிறையக லல்குல் புல்குங் கலைபழித் தகல நீத்தார்
அறைபறை யனைய நீரா ருமறைக் காவ ரோதான்.

—உண். ப, 56—

**பதவுரை:** நறைகமழ் அலங்கல் மாலை நளிர்நறு குஞ்சி மைந்தர்-தேன்மணம் வீசுகின்ற அசையுந் தன்மையுள்ள மலர் மாலை சூடிய குளிர்ந்த நறியகுடுமியையுடைய ஆடவர்கள்,-துறை அறி-கரண வகைகளை யறிந்த, கலவி செவ்வி தோகையர்-புணர்ச்சிக்குரிய பக்குவத்தையுடைய மகளிரின், தூசு-ஆடைகளை, வீசி-அப்பால் எறிந்துவிட்டு, (அவ்வளவோடு நில்லாமல்), நிறை அகல் அல்குல் புல்கும் கலை பழித்து அகல நீத்தார்-நிறைந்து அகன்ற அல்குலை நெருங்கிச் சூழ்ந்த மேகலையென்னும் இடையணியையும் வெறுத்து அப்பாலெறிந்தார்கள்; (இது தக்கதே); அறைபறை அனைய நீரார்-ஒலிக்கின்ற பறைபோன்ற [எப்போதும் வாய்விட்டுக் கத்துந் தன்மையையுடைய]வர்கள், அருமறைக்கு ஆவர் ஒ-வெளிப்படுத்தற்குக் கூடாத இரகசியச் செயல் நிகழ்ம்போது உடனிருக்கத் தக்கவர்களோ? [தக்கவரல்லரன்றோ.]

—கண்ணதாசன்.

# ரஸ்புடீன்

''சிஷ்யா, என்னுடையது ரஷ்யா. அள்ளி வீசு பொதுப் பணத்தை!''

★

''ஏசு, ஏசு, என்று என்னை இழுக்கும் ஏந்திழைமார் எத்தனை பேர்கள்? மகான், மகான், என்று எனனை மடக்கும் மாடப்புறாக்கள் எத்தனை பேர்கள்? குருவே, குருவே, என்று என்னிடம் கொஞ்சும் அஞ்சுகங்கள் எத்தனை பேர்கள்? இந்த பஜனைக் கோஷ்டியைப் பிரிந்து பல்லக்கில் போக நினைப்போமா?''

★

''சந்நியாசி என்றும், சாதாரணங்களைக் கண்டால் உபன்யாசி என்றும், மடையர்களிடம் போய் உபவாசி என்றும், உள்ளூராரிடத்தில் பரதேசி என்றும் ஏமாந்த பெண்களிடம் சுகவாசி என்றும் பேசி பொய்யையும் புனைசுருட்டையும் அள்ளிவீசி மெல்ல, மெல்ல அரண்மனையைப் பிடித்துப்போட்டு அடித்தேன் அதிர்ஷ்டச் சீட்டு.''

★

''வண்டு மொய்க்காத புதுப் பூ! ஆம்; மற்றவர் குடிபுகாத மணிமண்டபம்! மொண்டு உண்ணும் அமுதக் கவிதையில் முதற்பதிப்பு. அவள் முத்துச் சிரிப்பை மறைத்தாலும், அவள் முகத்திலே தெரிகின்றது மோகத்தின் கொதிப்பு.''

★

ராஜ்யத்தையே ஆட்டிப் படைத்த, ரஷ்ய நாட்டு மர்ம யோகி ரஸ்புடீனது 'லீலா விநோத்'ங்களைப் பற்றிய நாடகத்தில் புரட்சிக்கவிஞர் பாரதிதாசனின் பேனாவிலிருந்து ஊற்றெடுத்துக் கிளம்பிய ஒளிமுத்துச் சொற்களே மேலே காணப்படுபவை.

## ரஸ்புடீன்

**புரட்சிக் கவிஞரின் புதிய படைப்பு! இதுவரை வெளிவராத சுவைமிக்க வரலாற்று நாடகம்!**

17-9-55 அன்று தென்றல் தரப்போகும் திராவிடநாடு பிரிவினை மலரில் ரஸ்புடீன் வருகிறான். படிக்கத் தவறாதீர்கள்.

★

**விலை அணா 4. 20 பக்கங்கள்.**

**நாட்டுப் பிரிவினைவார விழாவும் தி. மு. க. 7-வது ஆண்டு விழாவும்**

18-9-55 ஞாயிறு மாலை 6-மணிக்கு பெரம்பூர் எரி மைதானத்தில் நடைபெறும்: அவ்வமயம் அறிஞர் அண்ணா அவர்கள் சொற்பொழிவாற்றுவார்.

பெரம்பூர் இரயில்வே தொழிலாளர்கள் சார்பில் ரூபாய் 500 மாநில மாநாட்டு நிதி அளிக்கப்படும்.

மாபெரும் ஊர்வல அணியும் உண்டு.

**6-வது வட்ட
தி. மு. கழகம், பெரம்பூர்,
சென்னை-11.**

# கொலைவாளினை எடடா!

## ஆசிரியத் தோழருக்கு..

அன்புடையீர்,

நேற்று ,,தமிழ்நாடு'' (4-9-55 தேதி) இதழ் கண்டேன். நெஞ்சம் வெம்புகிறது. நேர்மையில் மாசு எனும்போது நீர்க்குளமாகின்றன கண்கள். அமிழ்து என்று சொன்னவன் இனிக்கக் கண்டிருக்க மாட்டான். கன்னல், கதலி என்ற சொல்லின் கூட நா இனிப்பது இடையாது. ஆனால் 'தமிழ்' என்று சொன்னவன் நாஇனிக்கக் கண்டிருக்கிறான். தேனூறு ஊனெல்லாம் பெருக்கெடுத்து ஓடக்கண்டிருக்கிறான். அஞ்சுவண்ண நிலங்காட்டித் திணை எழுதி, அகம்பாடிப் புறம் பாடி, பஞ்சமிலாப் பரணி கண்டு, தண்டமிழின் சுவை, சுவைக்கக் குறையாத தேனமுது இங்குண்டு எனச்சொல்லி மகிழ்ந்திருக்கிறான். கொஞ்சுமொழி தமிழ் கேட்க பூக்காடாகிறது நெஞ்சம்...இந்த நிலையிலே நேற்று கேட்ட செய்தி தமிழ் நாட்டு மக்களின் இதயத்திலே பெரும் புகைச்சலை, வெறுப்பை வெந்தும் தணியாத அருவருப்பை ஏற்படுத்தியிருக்கிறது. தமிழ் நாட்டும் பிறவிக்குருடனும் கண்விழித்துக் கனம்புக வேண்டிய கட்டம்! ஆயிரமாயிரம் புலவரும், புரவலரும் கட்டிக்காத்த பட்டத்து யானை, சிலம்பணிந்து, சிங்கார வளையணிந்து, மணியணிந்து, குண்டலமும் மேலணிந்து, குறளெடுத்த கையில் பத்தும் எட்டும் சேர்த்தெடுத்து அன்னை தனை அம்பாரி மேலெடுத்து அழகுவலம் வந்த யானை...அதைத் தொட்டுப்பார்த்து விளக்கவுரையளிக்க வந்த கல்லாத குருடர் செயல், ஆதிக்க வெறி பிடித்த அடாத செயல் நல்லவரின் உள்ளத்தை வேதனைப் பிழம்பாக்குவதில் வியப்பென்ன ?

மதுரையம்பதி வளர்த்த சங்கமும், சங்கம் வளர்த்த தரணியும் அவமானத்தால் சுருங்குகின்றன. வள்ளுவர்கழகத்தார் இந்திய அரசியல் சட்டத்தின் தமிழாக்கம் கேட்டார்களாம்! குழலோசை யாழோசைத் தோற்றுவிட்ட நல்லோசை வடிவத்தை அழித்து, இந்தியிலே ஏற்றிப்பிணித்து தமிழாக்கம் தந்திருக்கிறார்களாம் அந்த வடபுலத்து வெறியர்கள், இஃது தமிழின் உருவை பழித்த செயலோ அழிக்கும் செயலோ எதுவேனும் தமிழுக்கு இழைக்கப்பட்ட பெருத்த அவமானமாகும். 'எங்களால் இதுவும் முடியும்' என்று இந்தி வெறியர்கள் கூறுகிறார்கள். நியதிக்குப் புறம்பாக ஆணவம் அறை கூவல் விடுகிறது...தமிழகம் என்ன செய்யப் போகிறதோ ?

தமிழின் உருவம் சிதைக்கப்படுகிறது-அன்னையின் எழில் அழிக்கப் படுகிறது-அவமதிக்கப்படுகிறது, தமிழைப் பழித்தவனை தாய் தடுத்தாலும் விடேன் என்று கூறியவர் தம் முன்னிலையிலேயே! தமிழ் தெரிந்த ஒருவர் தான் இந்த வினைதப் படைப்பிற்குக் காரணம் என்றால், அவரும் ஒரு தமிழர் என்றால், தமிழகம் உண்மையிலேயே நாணித்தலை குனிகிறது.

'வள்ளுவர் இன்றிருந்தால் நிலையழிந்து இறந்திருப்பார்; இளங்கோவோ கூத்தரோ கண்டிருந்தால்... தமிழ்க்கிழவி ஔவை இன்றிருந்தால் அவிந்திருப்பர். சீழ்த்தலையார் கண்டிருந்தால் நா அறுத்துப்பின் கோல் கொண்டு விழியைக் குருடாக்கிக் கொண்டிப்பார், நா (ன) மல்லவா இருக்கிறேன். (ரேம்)! இந்தி வெறியர்களின் இந்த முறையற்ற செயல் மதுரைத் திருவள்ளுவர் கழகத்தினரை மட்டுமின்றித் தமிழகத்தையே வேதனைக்குள்ளாக்கியுள்ளது.

தமிழ் மக்கள் என்ன செய்யப் போகிறார்களோ ?

இன்றைய தமிழகப் பெரும் புலவர்களான பாரதிதாசனார்; இராசமாணிக்கனார், அப்பாத்துரையார் வரதராசனார், பரந்தாமனார், இலக்குவனார் போன்றோர் இந்த இழிநிலை களைய முன் வரவேண்டும். 'தென்றல்' ஆவன செய்ய வேண்டும்.

சோமவர்மன்.

◉

அன்புடையீர்,

தென்றல் புதுப்புதுத்துறையிலே புகுந்து தமிழ்ப்பணி புரிந்து வருவது கண்டு மகிழ்ச்சி. தமிழ்ப் பணிக்கு இன்னுமோர் முக்கிய துறையிருக்கின்றது. அது தான் தமிழில் கலைச்சொற்களை உருவாக்கும் பெரும் பணியாகும். இத்துறையில் இதுவரை எந்த ஆசிரியரும் கருத்தைச் செலுத்தினதில்லை; இனியும் செலுத்தப் போவதுமில்லை; ஆகவே இதை நாம் தான் செய்தாக வேண்டும். ஆகவே தென்றல் இப் பெரும் பணியை யேற்று, தனது முழு ஆற்றலையும் பயன் படுத்தி, தமிழ் மொழியை வளம் படுத்துவதன் வாயிலாக தமிழில் கலைச் சொற்கள் இல்லையென்ற குறையைப் போக்க வேண்டும்.

தமிழில் கலைச்சொற்களை ஆக்குவதில் ஆட்சியாளரையோ, அவர்கள் ஏற்படுத்தும் குழுக்களையோ நம்பிப்பயனில்லை. குழுவிலுள்ள அறிவியப் அறிஞர்களுக்குத் தமிழறிவும் ஆர்வமுமில்லை. தமிழறிவு மிக்கவர்கள் அறிவியல் அறிஞர்களாக விருப்பதில்லை. அறிவியல அறிவும், தமிழ் ஆர்வமும், கலைச் சொற்களையுருவாக்கும் ஆற்றலும் ஒருங்கே கொண்ட திரு கா. அப்பாத்துரையார் போன்ற அறிஞர்களுக்கு குழுவில் இடமில்லை. இந்த நிலையிலே அந்தக் குழுவை நம்பி யாது பயன் ?

இத்துடன் நம்முடன் துணை நின்று ஒத்துழைப்பதற்கு எண்ணற்ற அறிஞர்களும், மாணவமணிகளும் காத்துக்கிடக்கின்றனர். அவர்களின் துணை கொண்டு நாம் எந்தத்துறையிலும் புகுந்து பணியாற்றி வெற்றிக்கொடி நாட்ட முடியும்.

அறிவியல், மருத்துவம், கணக்கு வரலாறு, மெய்யறிவு, மின்னி, பொறியியல், இயற்கை, முதலிய துறைகளிலும் இன்னும் மற்ற துறைகளிலும் படித்துப்பட்டம் பெற்ற பல்கலை அறிஞர்கள் பலர் தமிழ் நாட்டில் இருக்கின்றனர். இவர்கள் தமிழ் பணி புரிவதற்கான ஓர் வாய்ப்புக்கிடைக்காதாவென ஏங்கித் தவிக்கின்றனர். அதே போன்று பல துறைகளிலும் பயின்று வரும் ஆர்வம்மிக்க தமிழ் மாணவர்கள் எவ்வளவு கடினமான பிற மொழிக்கலைச் சொற்களுக்கும், அவைகளுக் கீடான தமிழ்ச் சொற்களை எங்களால் உருவாக்கிக் கொடுக்கமுடியும் என்று மார்தட்டிப்பேசுகின்றனர். ஆகவே இவர்களின் துணை கொண்டு தமிழ்ப்பணி புரிவோம் வாருங்கள்.

கலைச்சொற்களையுருவாக்குவதற்கு முக்கியமாக இரு வழிகளைக் கையாளுவோம். சில ஆங்கிலச் சொற்களை வெளியிட்டு அவற்றிக்கான தமிழ்ச் சொற்களை எழுதியனுப்பும்படி கேட்பது. பலர் எழுதியனுப்புவார்களல்லவா? அவைகளையெல்லாம் அறிஞர் கா. அப்பாதுரை அவர்களைக்கொண்டு மிகமிகப் பொருத்தமான சொற்களைத் தேர்ந்தெடுத்து வெளியிடுவது. அந்தச் சொல்லை உருவாக்கிக்கொடுத்தவர் பெயரையும், ஊரையும் சேர்த்து வெளியிடலாம். அது இன்னும்ஊக்க மூட்டுவதாகவிருக்குமல்லவா ?

இரண்டாவது ஒவ்வொரு துறையிலும் தொடர்பு கொண்ட அறிஞர்களும், மாண்வர்களும், பத்து அல்லது 15 ஆங்கிலச் சொற்களைப் பொறுக்கியெடுத்து அவைகளுக்கான தமிழ்ச் சொற்களுடன் எழுதியனுப்பச் செய்வது. அவைகளை நாம் அறிஞர்களைக் கொண்டு சரிபார்த்து அனுப்பியவர் ஊர், பெயர் முதலியவைகளுடன் தென்றலில் வெளியிடுவது, இப்படியனுப்புவோர் ஒரு குறிப்பிட்ட ஆங்கிலச்சொல்லுக்கு என் அந்தச் சொல்லை உருவாக்கினேம் என்ற விளக்கமும் எழுதுவது நல்லது.

என்னைப் பொறுத்தவரை கலைச் சொற்களையுருவாக்கும் பணி மாணவர்களிடம் தான் விடவேண்டும் என்பவன் நான். மாணவர்கள் தான் சொற்களை அறிந்து உணர்ந்து கற்பவர்கள். ஆகவே அவர்கள் தான் தாங்கள் பிற மொழிகளில் கற்று உணர்ந்ததைத் தமிழில் சொல்ல முடியும்.

எனது கருத்தை பல அறிஞர்களிடம் சொல்லி அவர்களது திருத்தங்களை யேற்று, இது பற்றியொரு நல்ல முடிவிற்கு வந்து விரைவில் இப்புதுப்பணியைத் துவக்கும்படி வேண்டிக் கொள்ளுகின்றேன் இது பற்றி தங்களது பொன்னான கருத்துக்களை எழுதும்படி கேட்டுக் கொள்ளுகின்றேன். எழுதுவீர்களல்லவா ?

தங்கள்,
சதாசிவம்.
கோயமுத்தூர்.

## அகம் ஒழிந்தது !

புகழ் பெற்ற நாதசுரவித்வான் ஒருவர், பிரபு வீட்டுத்திருமண விழா ஒன்றிற்கு அழைக்கப் பட்டிருந்தார்-கச்சேரி நடத்துவதற்கு!

திருமணம் நடத்தியவர் பெரிய செல்வந்தர். அந்த ஊருக்கு நாட்டாண்மைக்காரர். அவர் அடிக்கடி நாதசுரவித்வானிடம் வந்து, இதை வாசி, அதை வாசி, என்று சொல்லிக் கொண்டிருந்தார். இரண்டொரு பாட்டுகள் நீங்கலாக, நாட்டாண்மைக்காரர் சொன்ன மற்ற எல்லாப்பாட்டுக்களையும் வித்வான் வாசித்து விட்டார். கச்சேரி முடிந்தது. நாட்டாண்மைக்காரர் வந்தார். "எய்யா, நாயனக்காரரே நான் சொன்னதிலே இன்னும் பாக்கியிருக்குது போலிக்கே!" "நீங்கள் சொன்னதில் இரண்டுதானே விட்டுப்போய் விட்டது. ஆனால் நீங்கள் சொல்லாததை ஜனங்கள் விரும்பியதை ஐந்து அதிகமாக வாசித்திருக்கேனே"-வித்வான் சொன்னார். "எய்யா; ஜனங்களுக்கா கச்சேரி, என்மகன் கல்யாணத்திற்குத்தானே அய்யா கச்சேரி! நான் யாரு தெரியுமா ? மந்திரி யெல்லாம்கூட எனக்கு ரொம்ப வேண்டியவா! சாமான்யமா நினைத்துக்கொள்ளாதீர்கள்-இந்த ஊருக்கே நாட்டாண்மைக்காரர் நான் தானுக்கும்" என்று மிரட்ட ஆரம்பித்தார் நாட்டாண்மை.

நாதசுரவித்வானுக்குக் கோபம் வந்து விட்டது.

"நீங்க யாரு ?" கிண்டலாகக் கேட்டார்.

"நானா ? நாட்டாண்மைக்காரர்-ஞாபகமிருக்கட்டும்!" என்றார் ஆத்திரத்தோடு. நாதசுரவித்வான் புன்னகைதவழ அவருக்குப் பின்னடி அவருடைய வெள்ளி வெற்றிலைப் பெட்டியை வைத்துக் கொண்டிருந்த ஆளைக் கூப்பிட்டார். அந்த ஆசாமி தலைதாழ்த்தி நாதசுரவித்வான் முன் வந்து நின்றார்.

"நீ யார்"

"என் பெயரு ஆறுமுக முங்க!"

"அட, நீயாரப்பா !"

"நான் உங்களுக்கு வேலைக்காரனுங்க!"--பணிவோடு.

"இல்லை-ஊரிலே உனக்கு என்னப்பா உத்தியோகம்?"

"மணியக்காரனுங்க!"

"அப்படீன்னுஉன் உத்தியோகம் ?"

"சற்று முன்னடி, அய்யா சென்னாருல்ல, நாட்டாமையின்னு; அந்த உத்தியோகந்தானுங்க!

வித்வான் நாட்டாண்மைக்காரரை நிமிர்ந்து பார்த்தார். நாட்டாண்மைக்காரர் முகம் கோபத்தால் பழுத்துப்போயிருந்தது.

இந்த நிகழ்ச்சி, இன்றைய சென்னை அரசியலில் பங்கேற்றிருக்கும் காங்கிரஸ் பிரபலஸ்தர் ஒருவரின் வீட்டில் நடைபெற்றதாக நண்பர் ஒருவர் நமக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்.




## களம் 24

**காட்சி :** 24

**இடம் :** *குலோத்துங்கன் அரண்மனை.*

**நேரம் :** *மாலை.*

### அரைவழித் திறப்பு—Half way Opening

*[அம்பிகாபதியும் அமராவதியும் எதிரெதிரே உட்கார்ந்திருக்கிறார்கள். அமராவதி கால் இரண்டையும் ஒருக்கணித்து மடக்கியபடி உட்கார்ந்திருக்கிறாள். அவள் அருகிலே மல்லிகை அமர்ந்திருக்கிறாள்.]*

**அம் :** *ஆம்! நமது விதிமுறைகள் கண்டிப்பானவை! நமது சமுதாயச் சட்டங்கள் கட்டுப்பாடானவை! நீதிமுறையில் சிறு வளைவு ஏற்பட்டாலும் மன்னர் குலம் முழுமைக்கும் மாசு ஏற்படும். அதனால் மாண்டொழிந்தோர் பலர். ஓர் உதாரணம் சொல்கிறேன், கேள்! கோவலன் கொலையுண்டான் எனக் கேட்டதும் கண்ணகி பதறி எழுகிறாள். கொலை செய்யப்பட்டவன் குற்றவாளியே என்று பாண்டியன் அமைதியுற்றிருக்கிறான். அங்கே கண்ணகி வருகிறாள். அழகு செழித்திருக்கும் அரண்மனை வாயிலிலே கணவனை இழந்த அந்தக் காரிகை நிற்கிறாள். உள்ளே அரிமானேந்திய அமளிமிசை தென்னவர்கோன் அமர்ந்திருக்கிறான். நாடக உணர்ச்சிக் கட்டத்தை இந்நிலையில் நிறுத்தி, கண்ணகியின் போக்கினைப் பின்தொடர்கிறார் சிலப்பதிகார ஆசிரியர்.*

*வெளியிலே கண்ணகி,*

**'வாயி லோயே வாயி லோயே**
**அறிவறை போகிய பொறியறு நெஞ்சத்து**
**இறைமுறை பிழைத்தோன் வாயி லோயே**
**இணையரிச் சிலம்பொன் றேந்திய கையள்**
**கணவனை இழந்தாள் கடையகத் தாளென்று**
**அறிவிப் பாயே அறிவிப் பாயே......'**

*என ஆர்ப்பரிக்கிறாள். வாயிற் காவலன் தேயக் காவலன்பாலிதைச் செப்புகிறான், 'கணவனை இழந்தாள் கையில் சிலம்பேந்தி நிற்கிறாள்; வரச்சொல்லட்டுமா? வழிவிடட்டுமா?' என்று கேட்கிறான். 'வரட்டும்' என ஆணைபிறக்கிறது. கண்ணகி உள்ளே வருகிறாள். அரியாசனத்திருக்கும் அரசன் அந்த உரைசால் பத்தினியைக் காண்கிறான். 'நீரொழுகும் கண்களையுடையோய், யார் நீ?' என்கிறான்.*

*'தேராத மன்னா! செப்புவன் கேளாய்! பூம்புகார் என் நகர்! அந்நகரில் ஏசாச் சிறப்பின் இசைவிளங்கும் பெருங்குடி மாசாத்து வாணிகன் மகன் கோவலன்; அவன் மனையாள் நான்! ஆம்! சிலம்பு விற்க வந்து நின்பால் கொலைக் களப்பட்ட கோவலன் மனையாள் நான்! கண்ணகி என்பது என் பெயர்!' என எடுத்துரைக்கின்றாள். உடனே மன்னவன் வழுவமைதியாக, 'பெண்ணணங்கே! கள்வனைக் கொல்லுதல் கடுங்கோல் அன்று! அதுதான் அரசநீதி!' என்கிறான். உண்மையை உய்த்துணராத காரணத்தால்தான் அவன் அவ்வாறு செப்பினான். கண்ணகி சினங்கொள்கிறாள்.*

*அவள் கண்களிலே அனல் பறக்கிறது. 'நற்றிறம் படராக் கொற்கை வேந்தே! என் காற்பொற் சிலம்பின் உள்ள பரல், மாணிக்கம்' என்கிறாள். பாண்டியன் தேவியின் முத்துடைய பொற்சிலம்பு கொண்டு வரப்பட்டு மன்னன் முன் வைக்கப் பெறுகிறது. கண்ணகி, தன் காற்சிலம்பை உடைக்கிறாள். மன்னவன் வாய்முதல் தெறிக்கிறது மாணிக்கம்! மாணிக்கம் கண்டான் மன்னன்! ஆணிமுத்தல்ல அது என்பதறிந்தான்! ஐயகோ! தாழ்ந்த குடையன், தளர்ந்த செங்கோலன்,*

**''பொன்செய் கொல்லன் தன்சொற் கேட்ட**
**யானோ வரசன்? யானே கள்வன்**
**மன்பதை காக்கும் தென்புலங் காவல்**
**என்முதற் பிழைத்தது கெடுகவென் ஆயுள்'' என**

*மயங்கி வீழ்கிறான். இங்கேதான் நமது நீதிமுறை தெள்ளிதின் உணரப்படுகிறது. தவறு செய்தோம் எனக் கண்டதும், அவன் உயிர் தானாகப் பிரிகிறது. மனமறிந்து செய்ததல்ல; ஆயினும் வாழவில்லை ஆவி! அதற்குமேல் ஒரு விநாடியும் தாமதிக்கவில்லை! சாவதே முறை என அவன் நினைத்ததும் தானாகப் பறந்தது உயிர்! இது பரம்பரையாக அப்பண்பு வாய்க்கப்பெற்றோருக்கே இயலும்! தவம் செய்த சூத்திரனின் தலையைக் கொய்தான் இராமன் எனப் படிக்கிறோம். அங்கே அவன் மனமறிந்து அநீதி இழைத்தான். தான் மடிந்தானா? ஏன் மடிவான்! விரும்பிச் செய்த கொலை தானே அது? அவர்கள் பண்பு வேறு; அதற்கு அநீதியே உயிர்! நமது பண்பு இது; இதற்கு நீதியே உயிர்!*

**காவி யுகுநீருங் கையில் தனிச்சிலம்பும்**
**ஆவி குடிபோன அவ்வடிவும்—பாவியேன்**
**காடெல்லாம் சூழ்ந்த கருங்குழலுங் கண்டஞ்சி**
**கூடலான் கூடாயி னான்.**

**மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலும்**
**கையில் தனிச்சிலம்பும் கண்ணீரும்—வையைக்கோன்**
**கண்டளவே தோற்றான்அக் காரிகைதன் சொற்செவியில்**
**உண்டளவே தோற்றான் உயிர்.**

*கூடலான் கூடாயினான்! கண்டளவே தோற்றான்! உண்டளவே தோற்றான் உயிர்! அமராவதி, மயிர்நீப்பின் வாழாக் கவரிமாச்சாதி, தென்னவன் சாதி!*

**அம :** *மெய் சிலிர்க்கிறது! கேட்கும்போதே உணர்ச்சி பெருக்கெடுக்கிறது. அந்நாளிலே வாழ்ந்திருந்து இதைக் கண்டிருக்கக்கூடாதா என்று மனது துடிக்கிறது!*

**அம் :** *இந்த மண்ணிற்கு அது இயற்கையாகவே இருக்கிறது!*

**அம :** *நல்லது! நாள்முழுதும் புறநானூறு! அந்திபட்டால் அகநானூறு! இதுதான் தென்னவர் வாழ்க்கை முறை என்கிறீர்களே, ஒருமுறை!*

**அம் :** *ஆம்! அதற்கென்ன?*

**அம :** *அகத்துறை பற்றி நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்! தாங்கள் எழுதிவரும் கோவையே அத்துறை பற்றியதுதான் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். படித்துக் காட்டுவதாக நீங்களே சொல்லியிருக்கிறீர்கள்!*

**அம் :** *படித்துக் காட்டுவேன்! பொருளும் சொல்லுவேன்! ஆனால், அதில் வரும் வர்ணனைகள் எல்லாம் நம்மைப் பற்றியவைதானோ என்று நீ மயங்கிவிடக் கூடாது!*

**அம :** *(மெல்லச் சிரித்தபடி, தலைகுனிந்து) ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?*

**அம் :** *என் பாட்டுத் தலைவி, ஏறக்குறைய உன்னைப் போன்றவள் தான்! மேனி முதலாகக் குணங்கள் ஈறாக, அவள் நீயே தான்! விளக்கமாகச் சொல்ல ஆரம்பித்தால், 'என்ன! நம்மையே வர்ணிக்கிறாரே' என்று நீ நினைத்து விடுவாயோ என்பதுதான் என் பயம்!*

**அம :** *(சிரித்தபடி) நீங்கள் அழகாகப் பேசுகிறீர்கள்!*

**அம் :** *அதுதான் பலபேருக்கும் பொறுமையாயிருக்கிறது; என்ன செய்வது!*

**அம :** *தமிழ்கூட, பருவத்திற்குத்தான் வளைந்து கொடுக்கிறது!*

**அம் :** *முதுமையும் அதை வளைய வைத்துவிடுகிறது!*

**அம :** *உண்மைதான்!*

*[எனச் சிரித்தபடி, மெதுவாக எழுந்து, சாளரத்தின் அருகில் போய் நிற்கிறாள். மெதுவாக மல்லிகை எழுந்து, உள்ளே போகிறாள்.]*

**கண்ணதாசன்**

அம் : (அமராவதியை நோக்கி) என்? பாடம் கேட்க மனமில்லையா ?

அம : இயற்கை இங்கே பாடம் சொல்லிக்கொண்டிருக்கிறது !

அம் : (எழுந்தபடி) அதிலிருந்துதான் மொழியே பிறந்தது !

அம் : இயற்கை மொழியைப் பெற்றது ! மொழி இயற்கையை வளர்த்தது !

அம் : உலகமே அதுதான் ! ஒன்றுக்கு ஒன்று, ஒன்றினின்று ஒன்று, ஒன்றைக்கொன்று ஒன்று !

அம : விளக்கம் ?

அம் : பூச்சியைத் தின்பது பறவை; செத்த பறவையைத் தின்பது பூச்சி ! கொடியில் மலர்ந்தது மலர்; அது உதிர்ந்ததும் அதை உரமாக்கி வளர்ந்தது கொடி !

அம : இது தத்துவம் !

அம் : 'நமக்கெதற்கு' என்கிறாயா !

அம ; ஆம் ! இயற்கையைப் பாருங்கள் ! அதன் இன்பத்தை ரசியுங்கள் ! நிலவு முடிசூட்டிக்கொள்ள வருகிறது ! மலர்கள் ஒளி மயமாக மின்னுகின்றன ! அனுமதி பெருமலேயே அனைத்தையும் தொட்டுப் போகிறது தென்றல் ! அசைந்து கொடுக்கும் மரங்கள் கள்ளுண்ட காமுகனைப் போல் தடுமாறுகின்றன. என்ன ஆச்சரியம், பாருங்கள் ! அந்திநேரம் மனித உணர்ச்சிகளை ஆட்டிப் படைக்கிறது !

அம் : தினசரி நான் இதைக் காணுகிறேன் !

அம : நானும் கூடத்தான் ! ஆனால், இன்றைக்கு என்னவோ இதில் புதுமை மெருகு அதிகம் ஏறியிருக்கிறது !

அம் : (அவளை ஓரக்கண்ணால் பார்த்தபடி) இப்போது கொஞ்சம் கொஞ்சமாக எனக்கும் அது தெரிகிறது !

அம : (மூச்சிழுத்தபடி) ஆகா ! என்ன அருமையான மணம் !

அம் : உன் கூந்தலில் இருந்துதான் வருகிறது !

[அமராவதி அவனை மெதுவாகப் பார்த்து, திரும்பிக்கொள்ளுகிறாள். சிறிதுநேரம் அமைதி. 'அமராவதி' என்று மெதுவாகக் குரல் கேட்கிறது. அமராவதி திரும்பிப் பார்க்கிறாள்.]

அம் : அமராவதி ! என் நினைவு தடுமாறுகிறது.

[அமராவதி, அவன் கண்களை ஏறிட்டுப் பார்க்கிறாள். தடுமாறிய நினைவிலே வாய்ச் சொற்கள் அடைபட்டுப் போகின்றன. 'வருகிறேன்' என்று சொன்னபடி வேகமாகப் போகிறான் அம்பிகாபதி. அமராவதி அப்படியே அசையாமல் நிற்கிறாள். மல்லிகை அவள் அருகில் வருகிறாள். அமராவதியின் முகத்தைத் தொட்டுப் பார்க்கிறாள்]

மல் : ஐயோ ! கொதிக்கிறதே ! அமராவதி, வா.

[என்று கொண்டுபோய் படுக்கையில்சேர்க்கிறாள். பால்கொண்டு வரட்டுமா, பழங்கொண்டு வரட்டுமா, விசிறட்டுமா' என்கிறாள். 'இல்லை கொஞ்சம் பாடு' என்று மெல்லிய குரலிலே சொல்கிறாள் அமராவதி. 'ஐயோ ! எப்படி இருந்தவள் எப்படி ஆகிவிட்டாள் ? ஒரு நாழிகையிலே எவ்வளவு பெரிய மாற்றம் ?' என்று சிந்தித்தவாறு, உள்ளே போய் வீணையை எடுத்துக் கொண்டு வருகிறாள்.]

மல் : (பாடுதல்) (சிம்மேந்திரமத்திமம்)

கலையும் வளையும் இன்று கழல்கின்றதே !-இளமை
கண்கொண்ட காட்சியினில் உழல்கின்றதே
நிலையில் திரிந்த இளம் நேரிழை காதலிழை
வலையில் விழுந்த தொரு ரகசியம் சொல்வதுபோல்(கலை)

(புன்னாகவராளி)

கண்ட அன்றே மயக்கம் போலும்—வரும்
களிப்பினை யாருரைக்கக் கூடும் ?
அண்டும் தனிமை எனும் தீயும்—அவர்
அருகினில் வந்தாலே ஓயும் !

விண்டிட முடியாத விந்தையம்மா—சுகத்தில்
வேதனை தோன்றுவதும் விந்தையம்மா !
கொண்டதை அடைந்தாலே தீருமம்மா—மனம்
(கொண்)—அந்தக்
குறிகளெல்லாம் இன்று தோன்றுதம்மா—(கலை)

[அமராவதி கண்களை மூடியபடியே இருக்கிறாள். அவள் இதழ்கள் புன்னகைத்த வண்ணம் இருக்கின்றன. அந்தக் கனவைக் கலைக்க விரும்பாமல் மல்லிகை மெதுவாக எழுந்து சென்றுவிடுகிறாள்.]

—காட்சி முடிவு—

## களம் 25

காட்சி : 25

இடம் : ஆற்றங்கரை.

நேரம் : அந்தி.

[அரண்மனையிலிருந்து நடந்த அம்பிகாபதியின் மனம் நிலைகொள்ளவில்லை. உணர்ச்சி அவனை அலைக்கழிக்கிறது. ஒரு மரத்தின்மீது இடதுகையைச் சாய்த்து, வலதுகையை இடுப்பில் வைத்தபடி ஆற்றைப் பார்த்து நிற்கிறான்.]

அம் : (தனக்குள்) உணர்ச்சி, அறிவை அடக்க முயற்சிக்கிறது. இயற்கை விதி ! அதற்கு யாரும் தப்பமுடியாதா ? நான் பாடஞ் சொல்லத்தானே போனேன் ! மனம் பலவீனப் படக் கூடாதென்ற உறுதிகொண்டு தானே போனேன் ! அமராவதி !...பார்த்த பார்வை ? அதற்குப் பொருள் ? ...ம்...பித்தன் நான் ! இளம்பெண், ஏறிட்டு, இமை கொட்டாமல் பார்க்கிறாள் என்றால்...பொருள் தேடுகிறேனே நான் !

ஆகா ! வள்ளுவன் வடித்த மூன்றும்பால்...வரிவரியாக நடைபோட்டு வருகிறது ! குளிர் பூங்காற்றுக்கு அசைந்து கொடுத்த அந்தக் கூந்தல்...ஒளி மயமான நிலாப்பிழம்பன்ன நெற்றி...புருவ வளைவின் கீழே புறத்துறைத் தலைவனின் திடத்தையுங் கெடுக்கும் கருவிழி வட்டம்...ஓவியர்களும் உருவந் தீட்டுகிறார்களே... இந்த ஓவியம் விநாடியில் என் இதயத்தில் தீட்டப்பெற்று விட்டது !

நான் ஏன் அவசரப்பட்டேன்......இன்னும் கொஞ்ச நேரம் நின்றிருந்தால், முகம் பார்த்த விழிக்கோணம் நிலம் பார்க்க...மோகக் கவிதை எழில்மூண்டு வர...... நான் வாய்திறக்க...அவள் வார்த்தை சொல...நான் நெருங்க...அவள் நெகிழ...பழுத்த பழம்போல் இதழைப் பார்த்தபடி நின்று...சிரித்தபடி இதழோடு இதழ் சேர்த்துக்கொண்டு...வடித்தெடுத்த முதல் முத்தம் வாழ்கவெனப் பாடி...நிலையிற்றெளிந்து....பின்......கதை பல பேசியபடியே இந்தக் காசினியை மறந்திருப்போம்...

(சிரித்து) நினைவு முகம் கனவிலே தொடர் காவியம் எழுதுகிறது. காட்சி பாடிய பாயிரத்தின்பின், கற்பனை, காவியம் வடிக்கிறது! முழுக் காவியமும் காட்சியானால்...? உண்மை நிகழ்ச்சியானல் ? சீச்சீ ! எப்படி முடியும் ! அவள் எங்கே, நான் எங்கே ! மாளிகைக்கிளி ஏழைக் கவிஞனுடன் பேசவாவது ! ஏன் பேசக்கூடாது ! கவிஞன், விலை மதிப்பற்றவன் ! சொல்லப்போனால், இளவரசியின் தரத்துக்கும் உயர்ந்தவன்...மன்னன் இதனை ஏற்றால் கூட ஆச்சரியமில்லை !

[என்று சிந்தித்தபடியே திரும்பி நடக்கிறான்; ஆயத்தார் தெருவில் வந்துகொண்டிருக்கிறான். இருள் நன்றாகப் படர்ந்து விட்டது. மினுக்கிடும் தெருவிளக்குகள் வழிகாட்டிக்கொண்டிருக்கின்றன. மனித நடமாட்டம் குறைந்த அளவே உள்ளது. சிறிது தூரத்தில் ஒரு உருவம் முக்காடிட்டுச் செல்வதைக் காண்கிறான், அம்பிகாபதி. உருவம் தெரியவில்லையாயினும் நடை அவனுக்குப் பிடிபடுகிறது. அந்த உருவத்தைப் பின்தொடருகிறான்; அது, ஒரு சிறு இல்லத்தினுள் செல்கிறது. அம்பிகாபதி, வெளிப்புறம் நின்று காற்றுப்போகியின் வழியே கவனிக்கிறான். உள்ளே சென்ற உருவம் சுற்றுமுற்றும் பார்த்தபடி, முக்காட்டை நீக்குகிறது. "ஆ ! அவரேதான் !" என்று அம்பிகாபதியின் வாய் முணு முணுக்கிறது. கம்பன்தான் உள்ளே வந்தது ! ஒரு பெண் மெதுவாக வருகிறாள். "உஸ்" என்று வாயில் கைவைத்தபடி, கதவைத் தாளிடுகிறாள். திரும்பி வருகிறாள்.]

கம் : (மெல்லியகுரலில்) உன் கணவன் இன்னும் வரவில்லையே !

பெண் : இல்லை. காலையில்தான் வருவார். எதிர்பார்த்துக் கொண்டே இருந்தேன். பகல் நடவாதா, உங்களைப் பார்க்கமாட்டோமா என்றிருந்தேன்...உட்காருங்கள்.

[கம்பன் அமர, அவனருகில் அவள் அமருகிறாள்.]

கம் : (அவளைச் சேர்த்தபடி) குன்றெடுத்த பெருந்தனத்தோய் ! நின்னைக் கூடுதற்கே ஆவலுற்றேன் ! அன்றிருந்து என் மனத்தை நீ ஆட்டுவித்தலென் சொல்வேன் ?

பெண் : ஆகா ! இன்னும் பாருங்கள் ! இதற்குத் தானே உங்களைத் தினமும் தேடிக்கொண்டிருந்தேன் !

(வெளியில்) அம் : அடப்பாவி ! பிறன் மனையில் கம்பர் ! அவர் பிள்ளை நான் ! சீச்சீ ! என்ன கேவலம் ! இனிப் பொறுப்பது தவறு ! வருவது வரட்டும் ! தந்தையாவது மகனாவது ! தலையைச் சீவினும் தகும் !

[என்றவாறு, வாசற்புறம் வர, அங்கே வேகமாக அந்தப் பெண்ணின் கணவன், கைக்களவன்-வரக்கண்டு ஒதுங்கி ஒளிந்து, காற்றுப்போகியின் வழியே கவனிக்கிறான். கைக்களவன், கதவைத் தட்டுகிறான். தமை மறந்திருந்த கம்பனும் பெண்ணும் திடுக்கிட்டு எழல். கம்பன், கட்டிலின் அடியில் ஒளிந்துகொள்கிறான். கதவு திறக்கப்படுகிறது. கைக்களவன் உள்ளே வந்து எதையோ தேடுகிறான். பெண் திகைத்தல். கடைசியில் கட்டிலின் அடியில் மூச்சுவிடவும் பயந்து ஒண்டிக் கிடக்கும் கம்பனைத் தூக்கி நிறுத்துகிறான்.]

கைக் : (மனைவியிடம்) அடி பாதகி ! இது தெரிந்துதானடி விரைந்து வந்தேன் ! கம்பா ! காமுகா ! உன் கழுத்தை நெறிக்காமல் விடமாட்டேன் !

[என்று ஒரு தடியை எடுத்துவர, கம்பன் பயந்து]

கம் : (பாடல்)

மய்க்கிணையான விழிக்கணை கொண்டு
மருட்டி இருட்டறையில்
பொய்க்களவாகப் புகுந்தது மூண்டு;
புணர்ந்தது மில்லையடா !
கய்க்கிசைவான குறுந்தடி கொண்டு
கழுத்தை நெறிக்கவரும்
கய்க்களவாவென்றங்கலையடா ! நின் தாரம்டா விடடா !

[என்று, தாள் பணிந்து பாடியதும்]

கைக் : தப்பினாய் ! உன் கவிதைக்காக உன்னை விடுகிறேன் ! கடை கெட்டவனே ! ஓடிப் பிழைத்துக்கொள் ! இனி மீண்டும் வந்தால் தலைதப்பாது ! போ !

[கம்பன், ஆடையைக் கையில் பிடித்தபடி வெளியே ஓடுகிறான். ஓடியவன் திகைத்து நிற்கிறான்-அவன் எதிரே அம்பிகாபதி நிற்கிறான் !]

(தொடரும்)

# வள்ளுவன் மூத்தோன்!

"என் மார்பிற் பொருந்துக!" என அழைக்கிருன், காதலன்.

"பொருந்தேன். காரணம், பெண்ணியலார் எல்லோரும் நின்மார்பைக் கண்ணின் பொதுஉண்பர்" என ஊடுகிருள் காதலி. ஊடல் இப்படித்துவங்கி, அமைதியாக, அவள் அழகை நோக்கும் காதலனைப் பார்த்து, அவள், "யாரோடு என்னை ஈடு கட்டிப் பார்க்கிறீர்?" என்று மேலும் மேலும் ஊடுவதாக நிற்கின்றது. ஒன்றுக்கொன்று வளர்ச்சியுற்று, ஊடல் உணர்ச்சிகரமான நாடகமாகிறது. அந்த நாடகத்தில் கதாநாயகன் தோற்று விடுகிருன். நாயகி வெற்றிபெறுகிருள். ஆனல், தோற்ருனே காதலன், அவன் கண்டது தோல்வியல்லவாம்! அதுவும் வெற்றி தானும்! அது எப்போது தெரியுமாம்? அது கூடலில் காணப்படுமாம்!

> ஊடலில் தோற்றவர் வென்ருர் அதுமன்னும்
> கூடலில் காணப் படும்.

பேச்சில் - ஊடலில் - காதலிக்கு வெற்றி.

தோற்றவன் அருகில் வருகிருன். வெற்றிகொண்டவள் மறுத்தாளில்லை. வேல்விழியை வீசி வரவேற்கிருள். 'கூடி முயங்குதல்' நடைபெறுகின்றது. அப்போதுதான் தோல்வியின் மகிமையை வெற்றியாகக் காதலன் காண்கிருன். கொதிப்பேறிய நெஞ்சம் அங்கே உணர்ச்சிக் கூத்தாடுகிறது. கொதிக்கவைத்த பெண்மை அதற்கு வளைந்து கொடுக்கிறது.

> " ஊடலில் நான்உன்னை ஆண்டேன்
> கூடலில் நீஎன்னை ஆண்டுகொள் !"

எனச் சொல்லாமற் சொல்லித் துவண்டு விழுகிறது, பெண்மை. "ஐயோ! உங்கள் மனம் என்ன பாடுபட்டிருக்கும்! இல்லையா அத்தான்?" என்று மெல்லிய குரலில் இசைத்தபடி ஓரக்கண்ணுல் பார்க்கிறது. காந்தள்போலும் கைகளால் அவன் கன்னத்தை வருடுகின்றது. உடல் நெகிழ்ந்து கொடுக்கின்றது. ஆண்மையின் உணர்ச்சியைப் பெண்மை, துவண்டு வரவேற்கிறது.

"என்னை என்ன பாடுபடுத்திவிட்டாய்! இனி அப்படிச் செய்யாதே!" என்றவாறு, கூடலில் ஆண்மை அதிகாரம் செலுத்துகிறது. அடக்கி ஆள்கிறது. அந்த ஆட்சியிலே, பெண்மைக்கு சகல சுகங்களும் கிடைக்கின்றன.

பெண்மை - மென்மை.
ஆண்மை - வலிமை.

கூடல் நாடகத்தில் ஆண்மையோடு சமமாக நடந்துகொள்ளாது, "துவளும் பெண்மை." வளைந்துதான் கொடுக்கும். ஊடலில்தான் பெண்மை, ஆண்மையை வெற்றிகொள்ளும். கூடலில், ஆண்மை பெண்மையை வென்று, அந்த வெற்றியில் சம பங்கைத் தானமாகப் பெண்மைக்கும் அளிக்கும். இதுதான் முறையான குலமாதர்-கணவர்-நாடகம்.

அதுவன்றி, பயங்கரமான ஊடல் புரிந்து, கூடலில் தானும் சேர்ந்து குதித்து, மிருகத்தனத்தின் உச்சநிலைக்குப் போய்-" சமகால குஸ்தி" போடுவது, நாணமும் நளினமும் மிக்க பெண்மைக்கு அடையாளமாகாது. அதைத்தான் வள்ளுவன், அழகாகச் சொன்னுன்,

> "ஊடலில் தோற்றவர் வென்ருர் அதுமன்னும்
> கூடலில் காணப் படும்".

என்று

"அப்படியென்ருல், சமகால போகம்" என்கிருர்களே, அது என்ன?

அது, ஆணின் வலிமையளவு பெண்மை தானும் வலிமை பெறுவதல்ல. ஆணின் வலிமை, அள்ளித்தரும் சுகத்தில் சரிபாதிப் பங்கினை, தமை மறந்து பூரித்துப் பெற்றுக்கொள்வதாகும். பங்கு பெற்றதற்கு அறிகுறியாக ஆண்மையின் இதழை மெதுவாகச் சுட்டுவைத்தலாகும்.

" தந்தீரே அத்தான்! என்னை வென்றீரே அத்தான்!" என்பதுபோல், வாயிற் சிவப்பை விழிவாங்க, மலர்க்கண் வெளுப்பை வாய்வாங்க, கலவி அமுதம் அளித்தவனை, ஒருகண் சிறக்கணித்தாற்போலப் பார்த்தலாகும்.

ஆம்; கலவி அமுதம் அளித்தவன் அவன்-'அது' அவன் அளித்ததே தவிர, இவள் பற்றிக் கொண்டதல்ல! சுருக்கமாகச் சொன்னுல், கூடலில் முழுப்பங்கும் ஆண்மை எடுத்து, சுகத்திற் பாதியைக் காதலிக்கு அளிப்பதே முறையான காதலாகும். அதைத்தான் வள்ளுவன் சொல்லக் கண்டோம்.

இனி, " மகாகவி" கம்பனைப் பார்ப்போம். அவனும், இருவரது கூடலைக் காட்டுகின்ருன். ஆனல், இங்கே பெண்மை வளைந்து கொடுக்கவில்லை. சரிக்குச் சரியாகப் பாடுகிறது. "நீயா, நானு? பார்த்துவிடுவோம்!' என்று கேட்கிறது. சமஅளவு, வலிமை பெற்றுக்கொள்கிறது! "கீழ் மேலென்னும் கண்மூடி வழக்கத்தைத் தகர்க்கிறேன் பார்!" என்கிறது. "உனக்குத்தான் பலம் உண்டோ! நானும் ஒருகை பார்க்கிறேன்!" என்று ஆண்மையைப் படாதபாடு படுத்துகிறது. இங்கே, கிங்காங்-தாராசிங் மல்யுத்தம் நடைபெறுகிறது. பெண்மையின் நளினம், ஒரு குறிப்பிட்ட வரையறையையும் கடந்து வெறிநிலை பெறுகிறது. இது கூடலுக்கு மட்டுமல்ல; காதலுக்கே தவருகும்!

அது இது :

> **பொருவறு மதனன் போல்வா ஞெருவனும் பூவின் மேலைத்**
> **திருவினுக் குவமை சால்வா ளொருத்தியுஞ் சேக்கைப் போரில்**
> **ஒருவருக் கொருவர் தோலா ரொத்தன ருயிரு மொன்றே**
> **இருவர துணர்வு மொன்றே யென்றபோ தியாவர் வெல்வார்!**
>
> —உண். ப. 58—

'ஒருவருக்கொருவர் தோலா'ராம்! இதுதான் நான் குறிப்பிட்ட கிங்காங் - தாராசிங்! 'யாவர் வெல்வார்' என்று கேள்வி கேட்கிருன் கம்பன். அதற்குத்தான், "அட, பைத்தியக்காரா! ஊடலில் தோற்றவர் வெல்வார்" என்று பதில் சொல்கிருன் வள்ளுவன். கம்பனுரின் காட்சி, பக்குவமான காதலாக இல்லாததால் 'யார் வெல்வார்' என்று கம்பனுருக்கே புரியாமலிருக்கிறது. வள்ளுவனின் காட்சி, அமைதியும் முறையும் கொண்ட காதலாகையால் ஊடலில் தோற்ற ஆடவன், கூடலில் வெல்வான் என்று முடிவே சொல்லிவிடுகிறது!

**கண்ணதாசன்.**

## மயிலையிலே கைலாயப் பரம்பரை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வில்லை. குழந்தையைப் பெற்ற தாய், கதறி யழுகிருள். தோட்டத்தில் பாம்புப்புற்றுகள் எதும் கிடையாதே எங்கிருந்து வந்தது இந்தக் கருநாகம் என்று தோட்டக்காரன் புலம்புகிருன்.

கருநாகம் குழந்தையைத் தீண்டவில்லை, குழந்தையை நாகம் தீண்டுமா? ஆடி ஒடி களைத்து குழந்தை தோட்டத்துப் புற்றரையில் உறங்கியது. கதிரவனின் ஒளி குழந்தையின்மீது படாதிருக்கும் படி கருநாகம் ஒன்று படமெடுத்து குழந்தைக்கு நிழல் தந்தது. அக் காட்சி என்ன ஆனந்தமாக இருந்தது. நான் கண்ணுல் அக்காட்சியைக் கண்டேன். அந்த நாகமா குழந்தையைக் கொன்றிருக்கும். சேச்சே. அப்படிச் சொல்வது தவறு. குழந்தை மாண்டதற்கு கருநாகப் பாம்பின்மீது பழியைப் போடாதீர். நாகராசன், கோபிப்பான் என்று சாமியார் ஒருவர் பேசுகிருர். உலகம் அந்த மனிதரின் சொல்லை ஒப்புக்கொள்ளுமா?

நானிலம் பார்த்துப் பாராட்டிய நாடு இன்று பண்பற்றுப் போய் விட்டது. நாலு வர்ணங்களாகவும், நாலாயிரம் சாதிகளாகவும் மக்கள் பிரிந்து நல்வாழ்வை இழந்து விட்டனர், ஆரியம் செய்த கொடுஞ் செயலினுல். ஆனல், அன்பர் வரதாச்சரியார் பேசுகிருர், அரிசனங்கள் என்ற தீண்டப்படாத சமுதாயத்தினை வளர்த்தவர்கள் பார்ப்பனர்கள் அல்லவென்று. சாணக்கிய முனிவன் அலெக்சாண்டரை அழைக்கவில்லை; உமின்சந்து தனது பேராசையினுல் ஆங்கிலேயரிடம் நாட்டைக் காட்டிக் கொடுக்கவில்லையாம், வீரன் ஜூலியஸ் கோழையானது வேல்விழி மாதரின் சாகசத்தால் இல்லையாம். இன்னும் சொல்லப்போனுல் உண்மை பொய்யாம். ஆம். உண்மையைப் பொய் என்கிருர் உத்தமர்வரதாச்சாரியார்.

ஆனுல் இந்து தர்ம சங்க ஆண்டு விழாவில் அன்பர் வரதாச்சாரியாரை அடுத்துப் பேசிய சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி ஏ. எஸ். பி. ஐயர். பேசியிருக்கிருர். அவரது பேச்சில் உண்மை காணப்படுகிறது.

" ஒரு சமுதாயம் மற்ருெரு சமுதாயத்தைப் பொருளாதாரத் துறையிலும், சமுதாயத்துறையிலும், (அடிமைப்படுத்தி) இழிவுபடுத்தி வந்திருக்கும் சம்பவங்கள் உலக சரித்திரத்தில் காணப்படுவதைப் பார்க்கமுடியும்; ஆகவே இந்தியாவுக்கு மட்டும் (ஒரு சமுதாயத்தை மற்ருெரு சமுதாயம் இழி நிலைக்கு கொண்டுவந்த செயல்)இதுபோன்ற சம்பவங்கள் புதிதல்ல.

அரிசனங்களின் நிலையை உயர்த்த ஒவ்வொருவரும் சேரிகளுக்குச் சென்று சேரி மக்களின் உழைப்புக்கு உழைக்கவேண்டும்!

பார்ப்பன சமுதாயம் மற்ருெரு சமுதாயத்தைத் தாழ்த்தியது, இழிநிலைக்குக் கொண்டு சென்றது, தீண்டப்படாதவர்களாக்கியது என்பது வீண்பழி, பொய், தவறு என்கிருர் வரதாச்சாரியார்.

ஒரு சமுதாயம் மற்ருெரு சமுதாயத்தை அடிமைப்படுத்திய நிகழ்ச்சிகள் சரித்திரத்தில் ஏராளம். இந்தியாவுக்கு மட்டும் அது புதிதல்ல என்கிருர் நீதிபதி ஏ. எஸ். பி. அய்யர்.

ஆச்சாரியாரின் புனைந்துரைக்கும் அய்யரின் சரித்திர வாதத்திற்கும் இடையே காணப்படும் வேறுபாடு, பழியை ஒரு சமுதாயத்தின்மீது சுமத்தாது சரித்திரத்தின்மீதோ, அல்லது கடந்த காலத்தின்மீதோ போடும் முயற்சியில் காணப்படும் ஒற்றுமை இவைகளைக்கூர்ந்துகவனியுங்கள், உண்மை எது என்று தெரியும், ஊர்மக்களை சேரி மக்களாக மாற்றியோர் யார் என்பது விளங்கும்.

—சிவம்.

# வெண்பாப் போட்டி

## 15. தொட்டாலும் தோன்றும் சுகம் !

வெண்பாப் போட்டி 15-ன் பரிசுபெற்ற வெண்பாக்களையும், ஏனைய தகுதியுடைய வெண்பாக்கள் சிலவற்றையும் இந்த இதழில் வெளியிட்டுள்ளோம். மீதமுள்ளவை அடுத்த இதழில் வெளியாகும்.

◉ பங்கயத்தைச் சூரியனும் பைங்கன்றைத் தாய்ப்பசுவும்
மங்கையைக் காதலித்த மானிடனும்--செங்கரும்பின்
மட்டொழுகும் தீந்தமிழை வண்மதிகொள் பாவலனும்
தொட்டாலும் தோன்றும் சுகம்.

—சு. நாராயணசாமி, அகரப்பேட்டை.

★

◉ கட்டிக் கரும்பென்று கன்னத்தே முத்தமிடில்
திட்டி உமிழ்கின்றாய் ! தீதிலையோ ?--மொட்டனையாய் !
எட்டி உதைக்கின்ற வுன்கால்க ளென்னெஞ்சைத்
தொட்டாலும் தோன்றும் சுகம்,

—தமயந்தி, சென்னை-10,

★

சேயிழையே ! என்கண்ணே செந்தா மரைமுகமே !
ஆயிரத்தி லொன்றென்றால் ஆகாதே--நீயின்று
பட்டுவிட்டாய் பூவிழியே ! பட்டான உன்னுடலைத்
தொட்டாலும் தோன்றும் சுகம்.

—ந. அலி, திருச்சி.

★

இன்பத் தமிழ்காக்க இன்னுயிரைத் தானீந்த
அன்புத் தமிழ்மறவர், ஆம்இருவர் !--என்புகல்வேன்
கட்டழகுக் காளையர் கண்துஞ்சும் கல்லறையைத்
தொட்டாலும் தோன்றும் சுகம்.

—ஜி. அருணாசலம், துறையூர்.

★

நெஞ்சில் நினைத்தாலும் நேரிழைபேர் கேட்டாலும்
வஞ்சி வடித்தமொழி வாய்த்தாலும்--கஞ்சவிழி
பட்டாலும் பார்த்தாலும் பக்கத்தில் நின்றாலும்
தொட்டாலும் தோன்றும் சுகம்.

—தமிழ்வேள், பாப்பாரபட்டி.

★

கட்டியணைத் தாலுங் கபடக் கணிகையராந்
துட்டிகளா லின்பமென்றுந் தோன்றாதே--இட்டமுடன்
மட்டார் குழல்மனையாள் வந்துமகிழ் வாகநமைத்
தொட்டாலும் தோன்றும் சுகம்.

— க. மா. முத்துச்சாமிப் புலவர், அருப்புக்கோட்டை.

★

குற்றமில் காட்சிக் குதலைவாய் மக்களுடல்
கற்பு மனையாள் கவின்மார்பு- நற்றமிழ்நூல்
நட்பார்ந்த தோழன்தன் நற்றோளும் இந்நான்கைத்
தொட்டாலும் தோன்றும் சுகம்,

—க. வீ. வரதன், சென்னை.

★

மின்னற் கொடியன்னாள் மேவுந் தளிருடலாள்
கன்னற் றமிழ்மொழியாள் காதலியாள்--பொன்னற்கை
பட்டாலும் பால்மணக்கும் பாவை அவளுடலைத்
தொட்டாலும் தோன்றும் சுகம்,

—அருகு. கந்தன், பாகனேரி.

★

அள்ளி அணைக்காமல் ஆசை முகத்தினையே
கிள்ளுகிறீர் செல்லமாய் ஏனத்தான் ?--தெள்ளமுதே !
பட்டோ ? பழக்கதுப்போ ? பாவை உனதுமுகம்
தொட்டாலும் தோன்றும் சுகம்,

—அமரன், காமாட்சிபுரம்.

பெற்றவர்க்குத் தம்மக்கள், பேசுமொழி கேட்டாலும்,
கற்கும் நடையழகைக் கண்டாலும்,--பொற்சிறுகை
பட்டதனை உண்டாலும், பூப்போலும் மெல்லுடலைத்
தொட்டாலும் தோன்றும் சுகம்,

—தமிழவேள், வேலூர்.

★

கன்னற் கனிரசமே ! கற்கண்டே ! சர்க்கரையே !
வன்னமலர்ப் பூங்கொம்பே ! மாசிலா--நன்மணியே
கட்டாணி முத்தே ! நின் கண்ணாடிக் கன்னத்தைத்
தொட்டாலும் தோன்றும் சுகம்.

—த. செங்கதிர்ச்செல்வன், சாமல்பட்டி.

★

வானூர்ந்து செல்லுகிற வண்ண முழுநிலவு
தானூர்ந்து வந்ததுவோ ! தாரணிக்கு--தேனூற்றே !
ஒட்டாது நின்னுடலை விட்டாடும் பட்டாடை
தொட்டாலும் தோன்றும் சுகம்.

—நம்பிதம்பி, பி.ஏ., அரக்கோணம்.

★

கட்டழகி யானாலும் காதலியை மெய்சேரக்
கட்டித் தழுவினால் தானின்பம்--எட்டிநின்றே
தட்டுத் தடுமாறிப் பேசுகின்ற தம்மகவைத்
தொட்டாலும் தொன்றும் சுகம்,

—கா. மு. சிதம்பரன், திருவையாறு.

★

காற்றமெழும் சேற்றினையே மாற்றமென ஆற்றாது
ஊற்றெடுக்கும் ஆட்டத்தில் உற்றெழுந்து--சிற்றடியால்
சிட்டு நடைநடக்கும் சிங்காரப் பொற்குழந்தை
தொட்டாலும் தோன்றும் சுகம்.

—மாணிக்கம், சிவகெங்கை.

★

நீராட்டித் தன்மகனை நெற்றியிலே முத்தமிட்டு
போர்காட்டிப் போர்முனையை ; நீர்விழியால்--சீராட்டிச்
சொட்டியமுன் செந்தமிழ்த்தாய் கண்ணீரை எண்ணத்தால்
தொட்டாலும் தோன்றும் சுகம்,

—ஏ. பி. ராமலிங்கம், பி.ஏ., திருச்சி.

★

மண்டியுள காதலின்பால் மன்பதையில் உள்ளமீந்து
எண்டிசையும் ஏற்றமுடன் நின்றிலங்கும்--கண்மணியே !
அட்டியின்றி உன்விதவைக் கோலமதை யற்றுவனைத்
தொட்டாலும் தோன்றும் சுகம்,

—நா. துரைசுவாமி, வேலூர்.

★

சிந்தைதான் நொந்துருகச் சேருணர்வு சேருக
நிந்தை பலபொறுத்து நின்றிருந்தேன்--வந்திட்டாய்
பட்டாளக் காரமச்சான் உன்சட்டைப் பொத்தானைத்
தொட்டாலும் தோன்றும் சுகம்.

—வேம்புமயில், பம்பாய் 17.

★

பஞ்சணையில் யான்புரண்டும் பால்நிலவில் காத்திருந்தும்
சஞ்சலம் போக்க வழியறியேன்--அஞ்சுகமே !
பட்டான மேனி, பளபளக்கும் உன்கன்னம்
தொட்டாலும் தோன்றும் சுகம்,

—ப. தியாகராசன், திருச்சி.

★

ஓங்கி உடல்வளர்ந்து ஒன்பதொரு மாதங்கள்
தாங்கித் தவங்கிடந்து தானீன்ற--மாங்கனியை
பொட்டிட்டு நல்லதொரு பட்டாடை தானுடுத்தித்
தொட்டாலும் தோன்றும் சுகம்,

—எம். ராஜம், கோவை.

★

சித்திரமே ! நீஎன்னைத் தீண்டல் சுகமெனினும்
முத்தமிழை நான்காக்க முந்துங்கால்--மெத்தயிடர்
பட்டெந்தன் நெஞ்சமதைப் பகைவர் எரியீட்டி
தொட்டாலும் தோன்றும் சுகம்.

—வளவன், வயலி.

★

நாளெல்லாம் வேலையுண்டு ; காயடக்கம் மீதமுண்டு ;
வேளைக்கே சோறில்லை ; வேகாதோ--உள்ளந்தான் ?
தோட்டத்தே இக்கிலையில், தொங்கும் கனியையவன்,
தொட்டாலும் தோன்றும் சுகம்.

—பொன்னரங்கன், ஆரியலூர்.

வாவியிலே செந்தா மரைசொட்டும் தேன்மாந்தத்
தாவுசுரும் பாய்என் தளிர்குழந்தை--மேவிப்பால்
கொட்டுமென் றன் தோள் தாவிக் கொஞ்சி இதழ்விரித்துத்
தொட்டாலும் தோன்றும் சுகம்.

—மேலை இந்திரா, கல்லுப்பட்டி.

★

தாயின் விடுதலையுந் தாவிலேழ் நல்லிசையும்
வாயுங் குழவி மழலையுந்தான்--மேயசெவிப்
பட்டாலும் பாத்தமிழிற் பாடுதற்கு நெஞ்சந்தான்
தொட்டாலும் தோன்றும் சுகம்.

—பா. நாராயணன், மேட்டுப்பாளையம்.

★

கண்ணிருந்தும் காணுமல் காதிருந்தும் கேளாமல்
பெண்ணாசை பொன்னாசைப் பேய்பிடித்து--மண்ணுலகில்
கெட்டேன் ! திருத்திட்டாய் தாயே ! நின் நல்லடியைத்
தொட்டாலும் தோன்றும் சுகம்.

—பு. முத்தையா, சேதுநாராயணபுரம்.

★

பெற்றெடுத்த தாய்நிலப் போர்முரசம் காற்றிலெழ
வெற்றிகொள மைந்தனிடம் வேல்கொடுத்த--நற்றாயின்
சொட்டுமெழில் வீரமெங்கும் மெத்தவுள தண்டமிழைத்
தொட்டாலும் தோன்றும் சுகம்.

—வே. அர. சைலவாசன், வேலூர்.

★

முல்லைக் கொடியாள்; முகமலர்ந்த தாமரையாள்
கொள்ளை அழகுடையாள்; கூர்விழியாள்--நல்லறிவுப்
பெட்டகமாம் என்னுடைய பூவைதன் கட்டுடலைத்
தொட்டாலும் தோன்றும் சுகம்.

—சோ. பாலகிருட்டிணன், காரைக்குடி.

★

பசலையுற்றேன்; பேயென்று பெற்றோர்க்குச் சொன்ன
கசடர்சொல் பொய்யென்று சொல்வாய்--பசுங்கிளியே !
"விட்டகன்றார் ஒண்முகமே நன்மருந்து; மெல்லவவர்
தொட்டாலும் தோன்றும் சுகம்."

—மு. சி. வெங்கடாசலம், திருச்சி.

★

தங்கத் தமிழ்நாடே தாரணியின் வாழ்வொளியே
சிங்களத்தே உன்புதல்வன் தொல்லையைப்பார்
--பொங்குசினம்
பட்டோடி வந்தஅவர் பைந்தமிழ் மண்ணுன்னைத்
தொட்டாலும் தோன்றும் சுகம்.

—இரா. அப்பாதுரை, மேலப்பத்தை.

★

பொருள்தேடும் காரணத்தால் போய்விட்ட அன்பர்
வரும்நாளை எண்ணிமனம் வாடும்--பிரியும்நாள்
கட்டி அணைத்துக் கள்முத்த மிட்டதனைத்
தொட்டாலும் தோன்றும் சுகம்.

—சு. சுடலையாண்டி, B. Sc. செங்கோட்டை.

★

என்னை ஏங்கவிட்டு எங்கேதான் சென்றாயோ
என்னுள்ளம் நோகுதடி ஏந்திழையே--பெண்மயிலே
தட்டிக் கழிக்காமல் தாரகையே நீவந்து
தொட்டாலும் தோன்றும் சுகம்.

—ஆ. காயாம்பு, விருதை.

★

பூமணக்கும் கைகாலும் பொன்னுடலின் மென்பாங்கும்
ஆவியனை இன்முகத்தின் அன்பொளியும்--தாவிவரும்
மட்டுநிகர் தீங்குரலும் மன்குழந்தை நம்மைத்தான்
தொட்டாலும் தோன்றும் சுகம்.

—ரதி, சென்னை-7.

★

என்னுயிரே இன்னமுதே ! ஏற்றமுறு பெண்அணங்கே !
மன்னுபுகழ் மங்கையே ! மாத்தமிழே !--இன்சாற்றுக்
கட்டியே ! உன்றன் கனியிதழை என்இதழால்
தொட்டாலும் தோன்றும் சுகம்.

—அ. மணிவாசகன், கீழப்பூங்குடி.

★

தங்கநிற மெய்யழகும் சங்குநிறப் பல்லழகும்
பொங்கிப் பெருகும் நகைமுகமும்--எங்குமே
கிட்டாத இன்பமுறு தேன்மொழி யாளவளைத்
தொட்டாலும் தோன்றும் சுகம்.

—இரா. கருப்பையா, ஆசிரியர், கண்டர்கோட்டை.

வாட்டும் வறுமையால் வாடி உடல்மெலிந்து
தேட்டம் சிறிதுமின்றித் தேம்புகின்றான்--பாட்டாளி
கட்டத் துகிலுண்ணக் கஞ்சி இவையவனைத்
தொட்டாலும் தோன்றும் சுகம்.

—ஏ. கே. கண்ணன், திருச்சி.

★

நாட்டைக் கெடுப்பவரை நற்றமிழைத் தூற்றுவோரை
காட்டிக் கொடுப்பவரை ஓட்டிடவே--நாட்டினிலே
நாட்ட முடனுழைக்கும் நல்லோர்க்குக் கைக்குண்டு
தொட்டாலும் தோன்றும் சுகம்.

—அ. நாமதேவன், தாரமங்கலம்.

★

தேன்சொட்டும் நந்தமிழைத் திக்கெல்லாம் சொல்லுதற்கு
வான்முட்டும் சீர்த்திமிகு வள்ளுவனார்--ஈன்றெடுத்த
திட்பமிகு செல்வம் திருக்குறளை நாள்தோறும்
தொட்டாலும் தோன்றும் சுகம்.

—சுப. மணிமொழியன், அண்ணாமலைநகர்.

★

தேசுடலாள் பொற்சிலைமேல், தென்றலே காதலெனும்
பாசத்தை ஏன்வளர்த்தாய்? பாவையிடம்--நேசத்தால்
கட்டறுத்துத் தாவுதே என்னுள்ளம் அன்னவளைத்
தொட்டாலும் தோன்றும் சுகம்.

—பொன். முத்து, சிவகங்கை.

★

காட்டிவிட்டாள் கள்ளவிழி !, காதலியென் நெஞ்சிலது
ஊட்டிவிட்ட தின்பம் !; உதட்டாலே--நாட்டமுடன்
சொட்டுமெழிற் கன்னியவள் கொவ்வைக் கனியிதழைத்
தொட்டாலும் தோன்றும் சுகம்.

—ஆர். மல்லபிள்ளை, திருச்சி.

★

இன்பத்தின் எல்லையினும் இன்குழலை வீழ்த்துமுயர்
வன்பெற்ற பைங்குதலை வாயினினும்--பன்மடங்கில்
எட்டிப் பிடித்தே யெழுந்துதவழ் தம்மகவைத்
தொட்டாலும் தோன்றும் சுகம்.

—பி. பக்கிரிசாமி, ஆசிரியர், விடயல்கருப்பூர்.

★

காற்றாலும் பூவாலும் காராலும் நற்கருப்பஞ்
சாற்றாலும் நீராலும் சார்ந்தமையும்--சோற்றாலும்
மட்டாலும் வாராதே மங்கையவள் பூங்கரத்தைத்
தொட்டாலும் தோன்றும் சுகம்.

—ந. குருபாதம், வாலாஜாபாத்.

★

ஆசைக் கினிதென்பர் அன்பென்பர் மேலென்பர் !
காசுக்கு மேலுண்டா காணென்பர்;--பேசிலிங்கு
வட்டித்த தேன்சுவையைப் பேச்சாக்கும் சேயைநாம்
தொட்டாலும் தோன்றும் சுகம்.

—பெ. நடேசன், சேலம்.

★

கற்றோர்கள் பன்மொழியைப் பாங்குடனே பேசிடினும்
நற்றமிழின் நாப்பழக்கம் நன்றென்பர்--கற்புடைய
கட்டழகி காதலைப்போல் தண்டமிழ்தான் உள்ளத்தைத்
தொட்டாலும் தோன்றும் சுகம்.

—மா. சண்முகம், திருவையாறு.

★

கட்டிப் பிடித்தணைத்துக் கன்னியிதழ் தேன்பருக
மட்டுமே வந்திடுமோ நற்சுகந்தான்--அட்டியின்றி
எட்டிநின்று ஊடல்செய்(து) இன்சொல்லால் உள்ளமதைத்
தொட்டாலும் தோன்றும் சுகம்.

—ப. முல்லைவழுதி, புதுக்கோட்டை.

★

கண்டிடினும் கேட்டிடினும் உண்டு உயிர்த்திடினும்
மண்டலத்து இன்பம் பயக்குமே--ஒண்டொடியாய் !
விட்டாலும் பேரமோகாண் ! நின்றன் தளிர்மேனி
தொட்டாலும் தோன்றும் சுகம்.

—பொ. நாராயணன், பி. ஏ., தெற்குச்சூரங்குடி.

★

சிந்தை குளிரவந்த சின்னஞ் சிறுகுழவி
தந்தை முனமர்ந்து பாகுமொழி--சிந்திடினும்
தொட்டுச் சிதறியகூழ் கையோட மேனிதனைத்
தொட்டாலும் தோன்றும் சுகம்.

—வித்வான். வை. சுப்பிரமணியன், வடசேரி.

★

பரிசுபெற்ற வெண்பா—பரிசு, ஓராண்டு 'தென்றல்' சந்தா.

# கவி ஷெல்லியும் காமராசரும்!

இலக்கிய மேதைகளின்முன் அறிவிப்பு, இன்று இந்த நாட்டை ஆள வந்திருக்கும் 'புண்ணியமூர்த்தி'களுக்கு தெரியாது என்பதை நாமறிவோம். புரட்சி இலக்கியங்களையும், புதுமைக் கலைகளையும் ஒதுக்கித் தள்ளிவிட்டு 'ஓடுங்கள் வெள்ளைக்காரர்களே!' என ஓம்காரக் கூச்சலிட்ட 'அதிதீவிர வாதி'கள் அவர்கள்! அவர்களுக்கு எங்கே தெரியப்போகிறது - புரியப்போகிறது படிப்பினைகளும், அபாய அறிவிப்புகளும்! சரியாகவோ, தவறாகவோ, ஆட்சி கைக்குக் கிடைத்துவிட்டது என்றால், ஆட்சியோடு, அதற்கானகுணநலன்களும், திறமையும் வந்துவிடும் என்று எண்ணி ஏமாறும் 'அரசியல் ஏமாளிகளை'ச் சேர்ந்தவர்கள் இந்தச் சக்கரக்கொடியினர். வெறும் அரசியலை மட்டும் குறிக்கோளாகக் கொண்ட அரசியல் இயக்கங்கள் - சமுதாய மறுமலர்ச்சி, அரசியல் சீர்திருத்தம் இவைகளைப் பற்றிய இலக்கியத்திலே நாட்டம் செலுத்தாத கட்சிகளின் முடிவு விளக்கின் 'இறுதி ஜோதி'க் காதையாகத்தான் முடிவடைந்திருக்கின்றன. உலக வரலாறு இதற்கு அழியாச் சான்றாகும்.

காங்கிரஸ் இயக்கத்தைச் சார்ந்தவர்கள், தாங்கள்தான் இந்த நாட்டின் நாயகர்கள் என்று தாங்களே பெருமைபடுத்திக்கொள்கிறவர்கள். அந்தத் தவறான கருத்தை மனதிலே பதித்துக்கொண்டே ஏதேச்சாதிகாரப் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். இதிலே, காங்கிரஸ்காரர்கள் (வடநாடு-தென்னாடு) ஒருவருக்கொருவர் சளைத்தவர்களாகத் தெரியவில்லை. ''பார்க்கிறேன் ஒருகை' என்போரும் 'பஸ்பமாக்கி விடுவேன்' என்று மிரட்டுவோரும் இன்றைய காங்கிரஸ் இயக்கத்திலே பெருத்துவிட்டார்கள். காமராஜர் மட்டிலும் அதற்கு விதிவிலக்காக இருக்க முடியுமா என்ன? அதுவும் காமராஜர் சாமான்யரல்லர் - இயக்கத்திலே ஊறிப்போனவர் - உழைப்பையே ஏணிப்படியாக்கிக்கொண்டவராகக் கருதப்படுகிறவர் - இந்த மாநிலத்தின் முதல்வர்-அவருக்கு இருக்கவேண்டிய தைரியம்-அலட்சியம் - மற்றவர்களைக் காட்டிலும் பதின்மடங்கு அதிகமானதாயிற்றே! அதனால்தான் அவ்வாறு பேசியிருக்கிறார்.

**" நாங்கள் நினைத்தால் தேர்தல் நடத்தாமல் சாகும்வரை நாங்களே மந்திரி பதவி வகிக்க சட்டம் போட்டிருக்கலாம்."**

சர்வாதிகாரத்தின் நிரந்தரக் காதலர்கள் என்று சொல்லப்படுகிறவர்கள்கூட வெளிப்படையாக வாய்விட்டுச் சொல்லியிராத துணிவான பேச்சு இது! மனிதன், நாகரீகம் உணராமல் இலைதழைகளை ஆடை அணிமணிகளாக எண்ணிக்கொண்டிருந்த காலத்திலேகூட யாரும் இப்படிப் பேசியதாக எந்த நூலிலேயும் காணப்படவில்லை. ஆனால் 'குடியாட்சி' என்று சொல்லிக்கொள்ளும் நாட்களில்தான் முடியரசுகளின் துடுக்குத்தனத்தையும் மிஞ்சக்கூடிய வகையிலே காமராசர் சென்றவாரம் பெரம்பூரில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரத்தில் பேசியிருக்கிறார். தேர்தல் பிரச்சாரம் என்றால் பொதுத் தேர்தல்கூட அல்ல - நகரசபைத் தேர்தல்- குப்பைத்தொட்டியை எங்கேவைக்கலாம்-பூங்காவை எங்கே அமைக்கலாம்-சாலை எங்கே போடலாம் என்பன போன்றவற்றைக் கவனிக்கும் சாதாரண ஸ்தல ஸ்தாபனத் தேர்தல்! அதிலே தான் காங்கிரஸ் இயக்கத்தின் 'ஜபர்தஸ்தை'க் காட்டியிருக்கிறார், சாகும்வரை மந்திரியாக இருக்க சட்டம் போட்டிருப்பார்களாம்! மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலே செய்யப்படுகின்ற புனிதமான ஒப்பந்தங்களாக அமையாத எந்தச் சட்டமும், எப்பேர்ப்பட்ட 'உலோக'த்தில் செய்யப்பட்டிருந்தாலும், அது தவிடுபொடியாக்கப்படும் காலத்திலே வாழ்ந்துகொண்டு காமராசர் தன்னுடைய 'கண்ணாடிச் சட்ட'த்தின் பெருமையைப் பற்றிப் பிரலாபித்திருக்கிறார்.

பேசினார், இனிமேல்தான் சர்வாதிகாரத்தைப் பின்பற்றுவதைப் போலவும், இதுவரை காங்கிரஸ் கட்சி ஜனநாயகத்திலிருந்து ஒரு அணு அளவுகூட பிசகி நடவாதது போலவும்! பம்பாய் நாட்டு மொரார்ஜி தேசாயிலிருந்து, மீஞ்சூர் பக்தவத்சலனாரின் பதவி வரை அத்தனையும் அரசியல் அட்டூழியத்தின் பாற்பட்டவைகள்தான். காங்கிரஸ் அரசாங்கம் பதவிகளை 'சிரஞ்சீவி'களாக்குவதற்கு இனியொன்றும் சட்டமியற்றத் தேவையில்லை-பயமுறுத்தல் பலன் தராது. காமராசரின் இந்த வாக்கு மூலத்தை நினைத்திடும்போது, கவி ஷெல்லியின் போதனைதான் நினைவிற்கு வருகிறது;

" அதிகாரம் ஒரு தொத்துநோய்; அதன் கைப்பட்டதெல்லாம் கருகிச் சாம்பலாகிவிடும்."

இதை இப்போது காமராசருக்கு நினைவூட்டுகிறோம்.

## அறிவிப்பு

என் பெயரில் "அருள்நெறி" என்ற புத்தகத்தை, மதுரை 'அறிவுப் பண்ணை' என்ற பதிப்பகத்தார் வெளியிட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட பெயரில் அப்படிப்பட்ட புத்தகத்தை வெளியிட நான் யாருக்கும் அனுமதியோ, உரிமையோ அளிக்கவில்லை. என்னுடைய கருத்துக்கள் என்று அப்புத்தகத்தில் தப்புந் தவறுமாகவும், தாறு மாறாகவும் இல்லாதும் பொல்லாதுமாகவும், மாற்றியும், திருத்தியும் என் சொற்பொழிவுகளை வெளியிட்டிருக்கிறார்கள்.

பொய்யையும் திருட்டையும் வாழ்க்கைக்கான வசதியாக வைத்துக்கொண்டு இழிதொழில் நடத்தும் தமிழகத்தின் அவமானச் சின்னங்களாக இருக்கும் அவர்கள், என் பெயரில், என்னைக் கேட்காமல் புத்தகம் வெளியிட்டிருக்கிறார்கள். அவர்கள்மீது வழக்கு தொடுப்பதற்கான முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது. நேர்மையான விற்பனையாளர்களும், பொது மக்களும் அவர்தம் இழிசெயலுக்கு ஆதரவு தரவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அன்பன்,
இரா. நெடுஞ்செழியன்,
25-8-55.

## வர்ணச் சாலம்

சீன மக்களுக்கு சிவப்பு நிறத்தில் அபாரப் பிரியம்; ஏனெனில் அந்த நிறத்துக்கு நோயைக் குணப்படுத்தும் சக்தி இருப்பதாக அவர்கள் நம்புகிறார்கள். ஆனால் கருநீலமோ, வெள்ளை நிறமோ சீனர்களுக்குப் பிடிக்காது. ஏனெனில், அவை துரதிருஷ்டம் பிடித்தவை, துக்கமயமானவை என்பது அவர்கள் அபிப்பிராயம். இந்த வர்ண உணர்ச்சி உங்களுக்கும் எனக்கும் தெரியாமலிருக்கலாம். ஆனால், நமது வியாபாரிகளுக்கு நன்றாகத் தெரியும். உதாரணம் தருகிறேன். உலகத்திலேயே குண்டுசி செய்வதில் திறமை வாய்ந்ததும் பெயர் பெற்றதும் இங்கிலாந்துதான். ஆனால், சீனாவுக்கோ இங்கிலாந்திலிருந்து குண்டுசி போவதே அநேகமாக நின்றுவிட்டது. இங்கிலாந்துக் குண்டுசிகள் நல்லதாகவும் விலை சல்லிசாகவும் இருந்தாலும், சீனமக்கள் மட்டரகமான பிறநாட்டுக் குண்டுசிகளை அதிக விலைகொடுத்து வாங்கினார்கள். இந்தப் புதிருக்குக் காரணம் விளங்கவில்லை. கடைசியாக இந்தப் புதிர் விடுவிக்கவும்பட்டது. ஆங்கிலேயர் தமது குண்டுசிகளை கருநீலக் காகிதப் பட்டையில் குத்தி அனுப்பினார்கள்; பிறநாட்டாரோ சிவப்புப் பட்டையில் குத்தி யனுப்பிக் கொண்டிருந்தார்கள் — இந்த வர்ண பேதந்தான் சீனாவில் பிரிட்டிஷ் குண்டுசிகளுக்கு விற்பனை மந்தத்தை உண்டாக்கிற்று என்று கண்டுபிடித்தார்கள்.

வர்ணத்துக்கும் வர்த்தகத்துக்கும் நெருங்கிய சம்பந்தம் இருக்கிறது. மங்கலான கருநீல நிறக் கார்களை தென் அமெரிக்காவில் விற்க முடியாது. அவர்களுக்கு பளபளப்பான கண்ணை உறுத்தும் சிவப்பு நிறமாவது, மஞ்சள் நிறமாவதுதான் பிடிக்கும். மிட்டாய் வியாபாரிகளுக்கு தமது மிட்டாய்களை சாதாரண வெள்ளைக் காகிதத்தில் சுற்றிவைத்தால் விற்பனையாகாது என்பது தெரியும். இதை முயன்று பார்த்து, தோல்வியும் கண்டார்கள். ஆனால், சர்க்கரை மிட்டாய் வியாபாரிகள் தமது மிட்டாய்களை சிவப்புத்தாளில் சுற்றி விற்றபோது நிறைய விற்பனையாயிற்று; ஏனெனில் சிதப்பு நிறம் செழிப்பையும், சத்தையும் புலப்படுத்துவது என்று ஜனங்கள் கருதுவதே காரணமாகும்.

வர்ணங்கள் உணவிலும், ஜீரண சக்திகளிலும்கூட தம் ஜாலவித்தைகளைச் செய்துவிடுகின்றன. கண், மூளை, வயிறு மூன்றும் இது விஷயத்தில் ஒன்றுசேர்ந்து உழைக்கின்றன. பார்க்கப் பார்க்க அழகாயிருந்தால், வயிறும் பசிப்பதுபோல் தோன்றும்; ஆனால், அதே வேளை உணவு எண்ணெய் பிழிந்த கூழ்போலத் தோன்றினால் வயிறும் அதை ஏற்பதில்லை; கண்ணும் மூளையும் ஏற்பதில்லை. ஒரு ஆலையின் உணவுண்ணும் அறையின் சுவரில் இளம் நீலவர்ணம் பூசப்பட்டிருந்தது. ஆனால் அங்கு சாப்பிட வந்தவர்கள் அங்கு மிகவும் குளிருவதாகச் சொல்லி, அதற்காக கம்பளிச்சட்டைகள் போட்டுக்கொண்டார்கள். ஆனால், அங்கு குளிர்ச்சி ஏற்படுவதற்கே காரணமில்லை. உஷ்ணமானி வைத்து பார்த்தால்கூட சீதோஷ்ண நிலையில் வித்தியாசம் காணமுடியவில்லை கடைசியாக ஒரு வர்ண நிபுணர் வந்து சேர்ந்தார். அந்த அறைச் சுவர்கள் ஆரஞ்சு வர்ணத்தில் பூசப்பட்டன; மேஜை விரிப்புகளும் திரைகளும் ஆரஞ்சு வர்ணமாயின. அதன்பின் யாருக்குமே குளிரும் உணர்ச்சி ஏற்படவில்லையாம்.

வர்ணத்துக்கு நமது திடமனத்தையும் அசைத்துவிடும் தன்மை உண்டு. மனத்தின் சந்துஷ்டிக்கும், சாந்திக்கும் வர்ணம் பெரிதும் உதவமுடியும். நமக்கு ஓய்வு வேண்டும்போது, நாம் பச்சை வயல் வெளிகளுக்குச் செல்கிறோம். பச்சை குளிர்ச்சியும் இதமும் அளிக்கும் வர்ணம். பச்சை நிறத்தை கண்ணை உறுத்தாதபடி வெகுநேரம் பார்த்துக்கொண்டிருக்க முடியும்.

நவீன விஞ்ஞான வளர்ச்சியினால், செந்நீல வர்ணத்தின் மூலம் தூக்கத்தை உண்டாக்க முடியுமென்றும், நீலவர்ணம் நரம்புகளை சமனப்படுத்தி இளமையையும் காத்துதவ முடியுமென்றும் கூறுகிறார்கள். சாதாரணமாக எட்டுநாள் கழித்து வளர ஆரம்பிக்கும் வித்துக்கள் நீல நிறத்தால், இரண்டே நாட்களில் வளர ஆரம்பித்து விடுவதாகக் கூறுகிறார்கள்.

நிறங்கள் சீதோஷ்ணத்தையம் உஷ்ணத்தையும்கூடப் பாதிக்கின்றன. ஒரு பெட்ரோல் கம்பெனி டாங்கியில், பல காலன் பெட்ரோல் எண்ணெய் ஆவியாகிக் குறைந்துவிட்டது. கோடை வெயிலால் இந்த நஷ்டம் ஏற்பட்டபோதிலும், டாங்கியில் எந்த விதக் கோளாறும் இல்லை. எனவே வர்ண நிபுணர்கள் வரவழைக்கப்பட்டார்கள். அதன் பின்னர் அவர்கள் யோசனைப்படி டாங்கிகளை வெள்ளை வர்ணத்தால் பூசச் சொன்னார்கள். வெள்ளை வர்ணத்துக்கு சூரிய வெப்பத்தைத் திருப்பிவிடும் சக்தி இருப்பதால், அதன் பின்னர் பெட்ரோல் நஷ்டம் முக்கால் பங்கு குறைந்துவிட்டது.

இதே மாதிரி ஆண் பெண் பாலரிடமும் வர்ணப்பற்று வித்தியாசப்படுவதைக் காணலாம். ஆண்களுக்கு நீலநிறம் தான் அதிகம் பிடிக்கும்! அதற்கு அடுத்தபடியாக சிவப்பு பிடிக்கும். பெண்களுக்கோ சிவப்புத்தான் அதிகம் பிடிக்கும். நீல நிறம் அதற்கு அடுத்தபடியாகத்தான்.

சக்தி-ரோலண்ட் பிளாக்பர்ன்

## பூமாலைச் செண்டு

ஒரு பக்கத்தில் கொடுங்கோன்மையிருப்பதாலும், மற்றொரு பக்கத்தில் ஆற்றலற்ற தன்மையிருப்பதாலுமே பொய் பிறக்கிறது.

—இங்கர்சால்.

◉

ஓநாயுடன் நீ வசித்தால் ஊளையிடத்தான் கற்றுக்கொள்வாய்.

—ஸ்பானியர் பழமொழி.

◉

அறிவாளியின் வாக்கு அவனது இருதயத்திலிருக்கிறது. மூடனது இருதயம் அவனுடைய வாக்கிலிருக்கிறது.

—யாரோ.

◉

ஏழைகள் வறுமையால் மூடராகயிருக்கிறார்கள்; செல்வர்கள் பேராசையால் மூடர்களாகயிருக்கிறார்கள்.

—கார்க்கி.

◉

பணக்காரன் சொர்க்கத்திலிருந்தாலும் அவனுக்கு அங்கும் இடம் போதவில்லை.

—கார்க்கி.

சிலருக்குத்தான் திருமணம் காதலின் பூந்தோட்டமாகயிருக்கிறது. ஆனால் பலருக்கோ அது ஒரு போர்க்களம். காரணம், சரியாக வாழத் தெரியாமை தான்.

—சார்லஸ் கிளிங்டன்.

◉

சட்டம் ஏழைகளின் எசமான். பணக்காரன் சட்டத்திற்கு எசமான்.

—கோல்டுஸ்மித்.

◉

பொன்னாசை பிடித்தவர்களுக்கு வேண்டியவர்கள் இல்லை. பசி பிடித்தவர்களுக்குச் சமையலில் சுவை இல்லை. எழுத்தாசை பிடித்தவர்களுக்குச் சுகமும் துக்கமும் இல்லை. காம ஆசை பிடித்தவர்களுக்கு அச்சமும் அவமானமும் இல்லை.

—நீதி வெண்பா.

◉

கொடுங்கோலர்களை எதிர்த்துப் புரட்சி செய்வது தெய்வத்திற்கு வணக்கம் செலுத்துவதற்கு ஒப்பாகும்.

—பெஞ்சமின் பிராங்க்ளின்.

◉

திருமணம் ஒரு சிங்கார நாவல். அதன் முதல் அத்தியாயத்திலேயே கதாநாயகன் இறந்துவிடுகிறான்.

—உலகப் பழமொழி.

## "பார் சிறுத்தலிற் படை பெருத்தவோ-படைபெருத்தலிற் பார்சிறுத்தவோ"

—பழம்பாடல்

கடந்த ஆகஸ்டு மாதம் 14-ம் தேதியன்று தொடங்கிய அறிஞர் அண்ணா அவர்களின் சுற்றுப்பயணம் இம்மாதம் 4-ம் தேதியுடன் இனிது முடிவுற்றது.

ஆகஸ்டு மாதம் 14-ம் தேதி காலை மதுரையில் கூடிய பீடித் தொழிலாளர் கூட்டத்தில் பேசிவிட்டு, அங்கிருந்து நெல்லை சென்று, நெல்லை மாவட்டத்தைச் சார்ந்த பல சிற்றூர் பேரூர் கிளைகளின் சார்பில் நடைபெற்ற கழகக் கூட்டங்களில் கலந்துகொண்டு சொற்பொழி வாற்றினார். அந்த வட்டாரத்து மக்கள், தென்னாட்டுத் தலைவா, வருக! வருக! என வாழ்த்தி வரவேற்று, மாநில மாநாட்டுக்கு நிதி தந்து உதவினார்கள்.

தாயகத்தின் விடுதலை உணர்ச்சி கண்டு அண்ணா அவர்கள் மகிழ்வுற்று பெருமிதத்துடன் நெல்லை மாவட்டச் சுற்றுப் பயணத்தை முடித்துக்கொண்டு மதுரை மாவட்டத்தில் சுற்றுப் பயணத்தைத் தொடங்கினார்கள். மதுரையிட்ட தீ, மலர் மாலையாக மட்டுமல்ல - மணமுள்ள பொன்மாலையாக மாறியிருந்தது. ஏழையர் தலைவர் மதுரை மாவட்டத்தில், எங்கும் உற்சாகமாக வரவேற்கப்பட்டார். ஆங்காங்கே மாநில மாநாட்டிற்கு நிதியளிக்கப்பட்டது.

மூன்றாவதாக அண்ணா அவர்களின் சுற்றுப்பயணம் தென்னாற்காடு மாவட்டத்தில் தொடங்கியது. மாநில மாநாட்டு நிதியளிப்பு விழாப் பொதுக்கூட்டங்களும், மன்றத் திறப்பு விழாக்களும் நிகழ்ச்சி நிரலில் குறிப்பிட்டிருந்தபடி சிறப்புற நடந்தேறின. அண்ணா அவர்கள் சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு சென்ற கிழமை சென்னை சேர்ந்தார்கள். அண்ணா அவர்களின் சுற்றுப்பயணத்தில், சொல்லின் செல்வர் ஈ. வி. கே. சம்பத் அவர்களும், 'நம்நாடு' பொறுப்பாளர் அ. பொன்னம்பலனார் அவர்களும் கலந்துகொண்டார்கள்.

★

**தென்புலத்து வீரர்களே! திராவிடத்தின் செல்வங்களே!**
**மாநில மாநாட்டுக் காணிக்கை எங்கே? செலுத்திவிட்டீர்களா?**


# தென்றல்

மற்றுமொரு திருப்பு முகம்!
உன்னதமான திட்டங்கள்!

## 17-9-55

திராவிட நாடு பிரிவினை & தி. மு. கழக
ஏழாவது ஆண்டு விழா மலர்

[புரட்சிக்கவிஞர் பாரதிதாசன், எழுதும் "ரஸ்புடீன்" நாடகம் -- புரட்சிக்கவிஞரின் புதுப்படைப்பு! மற்றும் பன்மொழிப்புலவர், ம. ரா. பூபதி, எம். ஏ., கண்ணதாசன்-முதலியோர் எழுதுகிறார்கள்!]

— விலை அணா 4 —

★

## 1-10-55

'கண்ணதாசன்' எழுதும்

## 'வேலங்குடித் திருவிழா'

சமூகத் தொடர்கதை துவக்கம்.
உண்மையில் நடந்தது.

இலக்கியப் போட்டி முடிவுகள், "அண்ணா நாற்பது"-- கண்ணதாசன் கவிதை.

# தென்றல் திரை

ஆசிரியர்: ஜி. நாகராஜன்

விற்பனையாகும் பிரதிகள் 12,625

## 1-10-55

சிறப்பு மலர்

விலை அணா 8 தான்!

'கண்ணதாசன்' எழுதும் "கதை-வசன முறை"
கலைஞர் மு. க. வின் எழுத்தோவியம்!

மற்றும்,

பத்மினி, ராகினி, சாவித்திரி, அஞ்சலி, பானுமதி, குசலகுமாரி, கே. ஆர். ஆர். முதலியோரின் படங்கள்-- எழுத்துக்கள்! மற்றும் பலப்பல! விரைவில் பதிவு செய்க!

தென்னாட்டில் அதிகம் விற்பனையாகும் மாதமிருமுறைத் திரை இதழ் இது ஒன்றுதான்!

தனி இதழ் விலை அணா இரண்டு
மலர் அணா எட்டு

இந்த இதழில் 'எங்கள் தொழில் கேளாய்.'

சந்தா:
ஆண்டு ரூ. 6-0-0
ஆறு மாதம் ரூ. 3-0-0

தென்றல் கன்சர்ன்ஸ் : : சென்னை-6

சந்தா:
ஆண்டு ரூ. 3-0-0
ஆறு மாதம் ரூ. 1-8-0


ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் கண்ணதாசன். எ. எல். எஸ். அச்சகம், 2-127, மவுண்ட் ரோடு, சென்னை - 6.